உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் யிசு { விக்கிரம—வைகாசி } மலர் உ


| | | |
|---|---|---|
| க. | மெய்ப்பாட்டியல்<br>திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M.A., B.L., | 41 |
| உ. | "நக்கீரர் சொல்"<br>திரு. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A., | 49 |
| ௩. | ஆரியமுந் திரவிடமும்<br>திரு. தி. அ. இராமலிங்கச்செட்டியார் அவர்கள்<br>10-வது இந்தியக்கலைமாநாட்டில் பேசியது | 56 |
| ச. | பத்தாவது இந்தியக்கலை மாநாடு, திருப்பதி | 60 |
| ரு. | கலிங்கப்போரும், காலிங்க வீரரும்<br>திரு. ஈ. ஆர். நரசிம்மஐயங்கார் அவர்கள் | 63 |
| சு, | காட்சியளவை<br>திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள் B. A. (Lond) | 68 |
| எ. | தமிழ்ச்செய்திகள் | 74 |
| அ. | மதிப்புரை | 77 |
| கூ. | நன்கொடைகள்<br>பொழிற்றொண்டர் | 80 |


பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௰௬ | விக்கிரம—வைகாசி | மலர் ௨ |


உ

## மெய்ப்பாட்டியல்

திருவாளர், S. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M. A., B. L. பசுமலை.

(முற்றொடர்ச்சி: துணர் 16, மலர் 1, பக்கம் 7.)

**சூத்திரம் 16.**

பாராட் டெடுத்தல் மடம்தப வுரைத்தல்
ஈரமில்கூற்ற மேற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்தநான்கே நான்கென மொழிப.

**கருத்து** :—இது தோலாக்காதலின் நாலாங்கூறுணர்த்துகிறது.

**பொருள்** :—பாராட்டு எடுத்தல் முதல் கொடுப்பவை கோடல் உள்படத் தொகுத்த நான்கும் தோலாக் காதலின் நாலாங் கூறுமெனக் கூறுவர் புலவர்.

**குறிப்பு** :—பாராட்டெடுத்தலென்பது, புணர்ந்தபின் தலைவி தலைவன் நல்லியல்பினை வியப்பதாகும்.

“ நிலத்தினும் பெரிதே வானினுமுயர்ந் தன்று
நீரினு மாரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந் தேனிழைக்கும் நாடனொடு நட்பே” (குறுந் 3.)

" நாடன், தொல்லைத்திங்கள் நெடு வெண்ணிலவின்
மணந்தனன் மன்னெடுந் தோளே
இன்று முல்லை முகைநாறும்மே " (குறுந்-193)

" உவந்துறைவார் உள்ளத்துள் என்றும்; இகந்துறைவர்
ஏதிலர் என்னு மிவ்வூர் " (குறள்-1130)

இவற்றில் புணர்ந்தபின் தலைவி தலைவனலம் பாராட்டுதல் காண்க:—

இனி தலைவன், தலைவி நலம் பாராட்டுதற்குச் செய்யுள்;

" கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள "

என்பது போல வருவன காண்க.

இனி, மடம் தப உரைத்தலாவது, பேதைமை யொழியப் பேசுதல். முன் காமஞ்சாலாக் காலமெல்லாம் கரவறியாத் தலைவி களவிற் றலைவனை மணந்தபின் முன்னைய குழவி நீர்மை கழியத் தேர்ந்துரையாடத் தேறுதலியல்பு. அந்நிலைதான் மடம் தபுதல். (மடம்=கள்ளமற்ற பிள்ளைத் தன்மை. தபுதல்=கெடுதல்—நீங்குதல்) அவ்வறிமட நிலையிற் றெரிந்துரையாடலே மடம்தப உரைத்தலெனக் குறிக்கப்பட்டது.

இனி, பாராட்டெடுத்தல், மடம் தப உரைத்தல் முதலிய பலவாற்றானும் மறைத்த கூட்டம் புறத்துப் பொசிய அயிர்த் தயலார் தூற்றுதற்காளாதலும், அவர் பரிவற்ற பழிச் சொற் கேட்டு நாணுதலும் தலைவிக்கு நேரும். அம்பலோடலர் சொலும் வம்பர் மாற்றம் தலைவனறியக் கூறத்துணியார்; ஒருவாறு அறியினும் உரனுடைமையினால் அவன் பொருட்படுத்தானாதலின், அவர் கூற்றை அஞ்சுவது தலைவியர்க்கே பெரிதும் இயல்பாம். இனி, அதுவரை அலரஞ்சித் தலைவன் தருவன விலக்கிய தலைவி, அச்சமும் நாணும் அலராற்கழிய ஏதமில்லாக் காதலன் கையுறை தழையொடு கண்ணி தருவனகொண்டு பெருமகிழ்வுறுவது பெண்ணியல்பாகும். "நல்லாறெனினும் கொளல்தீ" தாதலின் தானொன்று வேண்டாத்தலைவி, பொருட் பொருட்டன்றி அருட் குறியாய்த் தலைவன் தருவன அவன்பொருட்டேற்பாள் என்பது குறித்து இங்கு அவன் கொடுப்பன கோடலுங் கூறப்பட்டது. தலைவன் உதவுங் காதற் கையுறைகளை அவன் ஈவன, தருவன என்னாது 'கொடுப்பன' என்றார், தருந்தலைவ னுணர்வில் பெறுந் தலைவியுயர்ந்தவளென்று எண்ணுவதியல்பாதலின். 'கொடுப்பன கோடல்'செயலாயினும்,கொள்பவளுணர்வை உள்ளவைப்பதால்

மற்றவள் எண்ண மூன்றுடும் எண்ணுதற் குரித்தா மென்னுங் குறிப்பால் "உளப்படத் தொகைஇ" என அதனைத் தனித்துச் சுட்டிக்கூட்டினர். இவை கரப்பு விருப்பைக் கடந்தெழுதிறத்த வாதலின், எடுத்த நான்கெனக் குறிக்கப்பெற்றன.

ஏகாரம்—இசை நிறை. புலவர் எனும் எழுவாய் பொருட் தொடர்பால் அவாய் நிலையாய்க் கொள்ளப்பட்டது.

**சூத்திரம் 17.**

> தெரிந்துடம் படுதல், திளைப்பு வினைமறுத்தல்,
> கரந்திடத் தொழிதல், கண்டவழி யுவத்தலொடு
> பொருந்திய நான்கே ஐந்தென மொழிப

**கருத்து :—** இது காதலின் ஐந்தாங் கூறுவனவற்றை உணர்த்துகிறது.

**பொருள் :—** தெரிந்துடம்படுதல் முதலிய நான்கும் மணம் பெறுமல் நைந்தழி தலைவியின் ஐந்தாங் காதற் கூறுமென்பர் புலவர்.

**குறிப்பு :—** முற்படும் அலரால் இற்செறிவுறினும், கிழவனை மணக்கக் கிடையா வழியும் ஆற்றுத்தலைமகள், ஆவன ஆய்ந்து, தலைவ னுடன்போக்குக்கு ஒருப்படவும், அன்றேல் தோழியால் அறத்தொடு நிற்க ஒருப்படவும் நேர்வள். இது தெரிந்துடம் படுதலாகும். ஆய்ந்து புணர்ச்சிக்குடம்படுதல் இதன் பொருள் என்பர் இளம்பூரணர்; முன் இருகையும் எடுத்தாங்கே கூட்ட வுடன்பாடு குறித்தமையால், ஈண்டது மீண்டுங் கூறவேண்டா தாகும்.

இனி, ஆற்றுத் தனிமையிலழியும்தலைமகள் களித்தல் கூடா உளத்தளாதலின், உவப்பிற்குரியவும் உவர்ப்பாளாகி, திளைப்பு வினைகளை வெறுப்ப தியல்பாம். அதனல் அந்நிலை விரிக்கப் பெற்றது.

"பாலும் உண்ணுள்" எனும் கயமனர் குறும்பாட்டில் "பந்துடன் மேவாள், விளையாட்டாய மொடு அயர்வோள்" என அன்புற்றழிபவள் முன்பு திளைத்தவிளையாட்டினையும் வெறுக்குங் குறிப்பு விளக்கப்படுதல் காண்க.

இனி, கரந்திடத் தொழிதலாவது, சுரந்தெழுகாதலைக் கரந்தழிதலைவி தனிமையில் வினையெலாம் தவிர்தலைச் சுட்டும்.

" யாமெங்காதலர்க் காணேமாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரைபோல
மெல்ல மெல்ல வில்லாகுதுமே " (குறுந் 290)

" யாவது மறிகிலர் கழறுவோரே
தாயின் முட்டைபோல வுட்கிடந்து
சாயின் அல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே " (குறுந் 152)

எனவரும் செய்யுளடிகளில் கரந்திடத்தொழில் கண்டு தெளிக. இனித்தலைவன் தற்காணவும் தான் அவற்காணவும் விரும்புவதே தண்டாக்காதற் பெண்டிரியல்பாதலின், அவ்வியல்புக்கு மாறாகவும், ஒழிதற் சொற்பொருட் கொவ்வாதாகவு மிதற்குப் பிறர் கூறுமுறை பொருந்தாமை தெரிந்து விலக்குக.

இனி, இவ்வாறு தனிப்படரால் மெலிவாள் தான்முயலாது தலைவனைக்காண நேரின் மகிழ்வது கூறல் வேண்டா. அதனால் கண்டவழி யுவத்தலென்றது இங்குக் கூறப்பட்டது. இதிற் கூறியநான்கும் தலைமகளின்கடக்கொணுக்காதலின் அறிகுறியாய் அமைதலின் இவை பொருந்திய நான்கெனக் குறிக்கப் பெற்றன.

'ஒடு' பிரிந்து சென்று முன்னைய ஒவ்வொன்றோடும் ஒன்றும் எண்ணிடைச்சொல். ஏகாரம்— இசைநிறை. முன்னதிற் போலவே 'மொழிப' எனும் வினைக்குப் பொருந்த அவாய் நிலையாற் புலவர் எனும் எழுவாய்கொள்ளப்பட்டது.

சூத்திரம் 18.

புறஞ்செயச் சிதைதல், புலம்பித் தோன்றல்,
கலங்கி மொழிதல், கையற வுரைத்தலோடு
புலம்பிய நான்கே ஆறெென மொழிப

**கருத்து :**—இஃது ஆறாக்காதலின் ஆறுங்கூறுணர்த்துகிறது.

**பொருள் :**—புறஞ்செயச்சிதைதல்முதலிய நான்கும் ஆறாக் காதலின் ஆறுங்கூறுமெனக் கூறுவர் புலவர்.

**குறிப்பு :**— உடன் போக்கும் மணமும் பெறாமல் இற் செறிப்புற்ற கற்புடைத் தலைமகள் வளர்ந்தெழு காதலாற் றளர்ந்தழி நெஞ்சொடு தனிமைதாங்காத்துனியால் வருந்துவள். அந்நிலையிலவள் தன் எண்ணம் அறியாமல் வண்ணமகளிர்

பண்ணுங்கோலம் காதலன் காண உதவாமையினுல் ஏதமென நூனந்தும், அதனைக்கடியவும்களையவுமுடியாமையினுல்இனைந்தும் அழிவாள். அந்நிலை இங்குப் "புறஞ்செயச் சிதைதல்" எனக் கூறப்பட்டது.

இனி, களவொழுக்கத்தில் ஆற்ருமையினுல் அழியுந்தலைவி தன் விருப்பம்பெறவும் தான்வெறுப்பன விலக்கவும் வழிகாணு மல் தாங்காத்தனிமையினுல் ஏங்கும்நிலை, "புலம்பித் தோன்றல்" எனப்பட்டது. "புலம்பு தனிமைத்தே" என்பது தொல்காப்பிய உரியியற் சூத்திரம். வருந்துபவளைப் பரிந்து சுற்றம் அவள் துனி முதல் வினவ அதற்கு அவள் சொல்வதறியாமல் குழம்பு முணர்வாற் குழறுநிலையைக் "கலங்கி மொழிதல்" எனக் கூறினர் தொல்காப்பியர்.

ஆறுக்காதலாலழிபவள்பிறவழித்தேருவெல்லைத்தெருமரு நிலையில் தன் ஆற்ருமை கூறத்துணிவாளாதலின், அவள் கையற வுரைத்தல் கடைசியிற் கூறப்பட்டது. "பூவிடைப் படினும்" எனும் சிறைக்குடி ஆந்தையார் குறும்பாட்டில்,

" பிரிவரிதாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுகதில்ல, கடனறிந்
திருவேமாகியவுலகத்
தொருவேமாகிய புன்மை நாமுயற்கே " (குறுந் 57)

எனக் காப்புமிகுதிக்கண் தலைமகள் தோழிக்குத் தன் ஆற்ருமை கூறுவதறிக. இதுபோலவே, "காலையும்பகலும்" எனும் குறும் பாட்டில் (32) " வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே " என அந்நிலையில் தலைவன் தன் கையறவு கூறுதலும் காண்க.

" இவளே,
அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்ப ணில் கிளைபோல
மொழிவகை யறியாள் பொழிகண் ணீர்துடைத்
தியானே கையற அலம்வரும் ;
கூருய் பெருமநிற் றேறுமாறே "

எனும் இலக்கண விளக்க மேற்கோள் பழம் பாட்டில் இங்குக் கூறிய மெய்ப்பாட்டுணர்வுகள் ஒருங்கமைய வந்தமை காண்க.

இதில், ஒடு-எண்ணிடைச் சொல்; ஏகாரம்-இசைநிறை. எழுவாய் அவாய் நிலை.

சூத்திரம் 19.

அன்ன பிறவு மவற்றெடு சிவணி
மன்னிய வினைய நிமித்தம் என்ப

**கருத்து:—** இது மேலனவற்றிற்குப் புறனடையாய் அவற்றின் பொதுத் தன்மையுணர்த்துகிறது.

**பொருள்:—** அன்னபிறவும் அவற்றெடு சிவணி = மேற்கூறிய ஆறு கூறுமுணர்வுகளை ஒத்தபிற காதற்குறிகளும் அவ்வாறெடுங் கூடி; மன்னியவினைய நிமித்தம் என்ப = அவையெல்லாம் நிலைத்த காதல் நிமித்தமாம் எனக் கூறுவர் புலவர்.

**குறிப்பு:—** இங்குக் கூறப்பட்டவும் அவற்றெடு பொருந்தக் குறிக்கப் பட்டவுமாம் உணர்வெல்லாம் நிலைத்த காதற் கூட்டத்திற்கு நிமித்தமாதலால், அவற்றின் பொதுவியல்பு நேரே பொருளாகாவிடினும் பொருளொடுபொருந்தி அக்கூட்ட விருப்பின் முதலும் விளைவுமாய்த் தோன்றுமாதலின், அவை அனைத்தும் கூட்டத்தினை குறிக்கும் நிமித்தம் எனப் பெறும். ஒன்றன் அறிகுறி, மூலம், தோற்றுவாய்களை அதன்நிமித்த மென்பது முறையொடுமரபாம். ஆதலின், வியாக்காதலை ஓயா துணர்த்துமிவை புணர்வுணர்வு பொருந்தவரும் நிமித்தம் எனப் பட்டன. இதனுல் இவற்றின் தன்மை கூறிற்றும். இனி, உரைத்த இருபத்து நான்கே புணர்வின் நிமித்தமெனக் கொள்ளாது, அன்னபிறவுள்ளனவும் தள்ளலாகாவெனக் கூறுத லால் புறனடையுமாயிற்று.

களவொழுக்கம், கந்தருவம்போல நேர்ந்தவழிப் புணர்ந்து தீர்ந்தவழித் துறக்கும் திறத்ததன்றும்; இருவயினெத்து, பிரியாது கூடிவாழ்தல், அன்றேல் தரியாது இறந்து முடிதல் எனும் துணிவுடையார் இருபாலவரும் ஒருவரைஒருவர்இன்றி யமையாக் காதலுடையார்க்கே உரியதாகலின், அவர் காதல் ஒழுக்கம் மன்னிய வினை எனப்பட்டது. மன்னுதல் = நிலையுதற் பொருட்டாதல், "மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை" எனுங் குறளாலும், "மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர்" எனவும், "மன்னுதல் வேண்டின் இசைநடுக" எனவும் வருஞ் செய்யுளடிகளாலு மறிக. நிலையாக் காமப் பொய்யொழுக்கை விலக்கி, என்றுங் குன்றுதிரு வயினெத்த நிலைத்த காதற் றிணைக்கே இம்மெய்ப்பாடுகளுரிய என்பதை விளக்க இவை "மன்னியவினைய நிமித்தம்" எனச் சுட்டப்பட்ட செவ்வி அறிந்து பாராட்டற் பாற்று.

சூத்திரம் 20.

'வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே'

கருத்து:—இது மேலனவற்றிற்கோர் புறனடை. கைபிகந்த காதல் நலிய ஆற்றாது மெலிபவர்பால் அன்பினைந்திணை நிமித்தமாம் மெய்ப்பாடுகள் கூறிய முறையில் நிகழாமையும் உண்டென்பது உணர்த்துகிறது.

பொருள்:—உயிர்மெலிவிடத்து = கழிபெருங்காதலால் ஆற்றாது உயிர் நையுங்கால்; வினை = அன்புத்திணை நிமித்தமாம் மெய்ப்பாட்டு நிகழ்வு; இன்மையும் உரித்து = மேற்கூறியாங்கு நேராமையும் அமையும்.

குறிப்பு:—ஈண்டு 'வினை' யென்பது முன் 'மன்னிய வினைய நிமித்தம்' எனச் சுட்டிய மெய்ப்பாட்டுத் தொகுதியையேயாம். ஈற்றேகாரம் அசை. 'இன்மையும்' என்பதன் உம்மை எதிர்மறைப்பொருட்டு; உண்மையே பெருவழக்கென்பது உம்மைக் குறிப்பு. மேற்கூறிய மெய்ப்பாட்டு நிகழ்ச்சியே பொதுவியலாதலின் அம்முறையில் அவற்றைச்சுட்டி 'அன்னபிறவும் அவற்றொடு சிவணி, மன்னிய வினைய நிமித்தமென்ப' என முதலிற் கூறி, அதற்குப் புறனடையாக, அவை ஓரோவழி உயிர்மெலிவிடத்து நிகழாமையும் உளதாம் என்று இதிற்குறிக்கப்பட்டது. கூறிய மெய்ப்பாடுகள் குறித்த முறை இறவாது நிகழ்வதே காதற் பொதுவியல்பென்பதும், விஞ்சுவேட்கையால் நெஞ்சறை போகிய காதலர் ஆற்றாமையாற் கூடுவர்; அன்றே மெலிந்து உயிர் விடுவாராதலின் அவர் அன்பொழுக்கம் கூறிய மெய்ப்பாட்டுமுறைகடத்தலும் ஓரோவழி உண்டென்பதும், முறையே இவ்விரு சூத்திரஞ் சுட்டும் கருத்தாகும்.

சூத்திரம் 21.

அவையு முளவே யவையலங் கடையே.

கருத்து:—இது மேற்கூறியவை தோன்றாவிடத்துக் கீழ்க் குறிக்கும் மெய்ப்பாடுகள் நிகழ்தலுமுண்டென்பது உணர்த்துகிறது.

பொருள்:—அவையலங்கடையே = முன் கூறிய மெய்ப்பாடுகள் நிகழாவிடத்து; அவையும் உள = பின் சுட்டப்படும் பிறவும் உரியவாம்.

குறிப்பு:—ஈற்றேகாரம் அசை. உம்மை எதிரது தழீஇய எச்சங் குறிக்கும். இஃது அடுத்த சூத்திரத்தின் முதலில் வைத்து எண்ணத்தக்கது. முன் 'ஆங்கவை யொருபாலாக' எனுஞ் சூத்திரம் சுட்டுவன அதற்குமுன் கூறியன வாராவிடத்து நிகழ்தற்குரிய எனுங் குறிப்புத்தோன்ற, அச்சூத்திர இறுதியில்

'அவையுமுளவே அவையலங்கடையே' எனக் கூட்டியுரைச்ச குறிப்பும் இங்கு அறிதற்பாற்று. ஆண்டு 'இவையும் உளவே' எனப் பிந்திய பேராசிரியர் பாடங்கொள்ளினும் 'அவையும் உளவே' என்பதே அவருக்குக் காலத்தால் முந்திய இளம் பூரணர் கொண்ட பழைய பாடமாகும். அதுவேபோல் இதிலும் அக்குறிப்புணர்த்த ஆசிரியர் 'அவையும் உள' எனவே கூறும் குறிப்பு நோக்க, முன்னதிற் போலவே இதிலும் புதிய பிற மெய்ப்பாடுகள் குறிக்குங்கால், அவை முற்கூறியன நேரா விடத்தே தோன்றுமெனச் சுட்டுதற்குரிய வாய்பாடே 'அவையு முளவே அவையலங்கடையே' எனும் தொடர் என்பது தேற்றமாகும். ஆகவே கூறும் புதிய மெய்ப்பாடுகள் முன் குறித்தவற்றின் முதலிடைகளில் விரவாமல் அவையல்லா விடத்தே தோன்றற்குரிய எனத் தெளிப்பதே ஈண்டு ஆசிரியர் குறிக்கோள். அக்குறிக்கோள் தெளிக்கும் பொருள் முடியா இதனைத் தனிச் சூத்திரமாகத் துணிந்தெண்ணுவதினும் கீழ்க் கூறும் புது மெய்ப்பாடுகளுக்கு மேற்குறித்தவற்றின் இயைபு தோன்ற, அவைசுட்டும் அடுத்த சூத்திரத்தில் இதைஇயைத்து இணைத்து ஒருசூத்திரமாகக் கொள்ளுவதே ஆசிரியரின் பொருள் நோக்கொடு சொற்போக்குக்கும் பொருந்துவதாகும்.

இனி, இதனை மேலனவற்றிற்கெல்லாம் புறனடையாக்கி "மேற்சொல்லப்பட்ட 'புகுமுகம் புரிதல்' முதலாயின உள நடுவண் ஐந்திணையல்லாத கைக்கிளைப் பொருண்மைக்கண்" எனவும், இதன்பிற்கூறுபவை களவுங்கற்புமாகிய ஐந்திணைக்கும் உரிய எனவும் இளம்பூரணர் பொருள் கூறுவர். சூத்திரத்தின் முற்கூறிய 'அவை' யென்பன 'புகுமுகம் புரிதல்' முதலாயின, பிற்கூறிய 'அவை' யென்பன 'களவுங் கற்பும்' எனக் குறிப் புரையுங் கூறிவைத்தார். இது 'புகுமுகம் புரிதல்' முதலிய வற்றிற்கு இவர் கூறிய பொருட் குறிப்பொடு முற்றும் முரணுவ தாகும். 'வேட்கையொருதலை' என்னும் களவியற் சூத்திரங் கூறும் ஐந்திணை அன்பு நிலைகளுள் முதல் ஆறு நிலைகளுக்குரிய மெய்ப்பாடுகளையே 'புகுமுகம் புரிதல்' முதல் 'புறஞ் செயச் சிதைதல்' ஈறுகவரும் சூத்திரம்ஆறும் முறையே விளக்குவதாக அச்சூத்திரக் கீழ்க்குறிப்புக்களால் வற்புறுத்திய உரை யாசிரியரே அவ்வுரைக் கோளொடு மாறுபட்டு இச்சூத்திரத் திற்குப் பொருள் கூறுவது மாறுகொளக் கூறுவதாகும். அதுவுமன்றி இங்கு சூத்திரநிலையும் சொல்லமைதியும் அவ ருரைக்கு இடந்தராமையும் தேற்றமாகும்.

(தொடரும்.)

௬

# " நக்கீரர் சொல் "*

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M.A.,

*தமிழ்விரிவுரையாளர், அண்ணமலைநகர்.*

நக்கீரரால் இயற்றப்பட்டவை என்று சொல்லப்படும் பாச்செய்யுட்களாக நாம் அறிபவை புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஆகிய தொகைநூல்களில் ஆங்காங்குக் காணப்படும் பாக்களும், திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் பெயரோடு பத்துப்பாட்டுத் தொகுதியிற் காணப்படுபவும், திருவெழுகூற்றிருக்கை பெருந் தேவபாணி கோபப் பிரசாதம், கண்ணப்ப தேவர் திருமறம், கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, ஈங்கோய்மலை யெழுபது. காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை எனப் பதினோராந் திருமுறையிற் காணப்படுபவும் ஆம். இவற்றிற் காணப்படும் சில சொற்கள்பற்றிய ஆராய்ச்சியே இப்பொழுது கருதப்படுவது. திருவள்ளுவமாலைச் செய்யுளொன்றும், நக்கீரரால் இயற்றப்பட்டன எனச் சொல்லப்படும் சிலதனிப்பாடல்களும் ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டில.

மேலே மொழியிய எடுத்துக்கொண்டவற்றுள், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை ஆகியவை ஒருவகை யிலக்கணப் போக்கும் மற்றவற்றுட் பெரும்பான்மைய வேறுவித இலக்கணப்போக்கும் உடையன எனத் தோன்றுகின்றது. பதினோராந்திருமுறையில் அடங்கியிருப்பினுந் திருமுருகாற்றுப்படை, அத்திருமுறையிலுள்ள நக்கீரருடைய பிற செய்யுட்களினின்றும் வேறுபடுகின்றது; திருவெழுகூற்றிருக்கை, கோபப்பிரசாதம், காரெட்டு என்பனவும் வேறுபடுகின்றன.

புறநானூறு முதலாய பனுவல்களினிடையே காணப்படுஞ் சில பொதுவழக்குக்களைக் காண்போம். நீ என்னும் முன்னிலை யொருமைப்பெயர் வேற்றுமை யேற்புழி "நின்" என இவற்றுள் நிற்பதைக் காண்கின்றோம்.

* திருப்பதியில் அண்மையில் நடைபெற்ற கீழைக்கலை மாநாட்டில் நிகழ்த்திய ஆராய்ச்சியுரை.

உதாரணம் :—

(1) "அறியவும் உளவோ நினக்கே" (புறம். 56 வரி. 16)
(2) "நின்வாய்" (அகம். 126 வரி. 1)
(3) "நின்வயிற்பிரியலம்" (ஷை 205 வரி. 3)
(4) "நின்மாட்டு......பேதுற்றனள்" (ஷை 310 வரி. 5)
(5) "நின்னிழல் கழிப்பி" (ஷை 340 வரி. 2)
(6) "நினக்கே...சாந்து...அணிகுவம்" (ஷை 340 வரி. 18)
(7) "நீ நின்...பாணனொடு" (ஷை 346 வரி. 12)
(8) "நின் மண்ணல்" (ஷை 369 வரி. 11)
(9) "நிற்பாராட்டி" (ஷை 389 வரி. 8)
(10) "நின்......கதுப்பின்" (நற்றிணை. 197 வரி. 5)
(11) "மெல்லிய லரிவை ......நின்" (ஷை 367 வரி. 7)
(12) "நின்......பசப்பே" (குறுந்தொகை 143 வரி. 6)
(13) "நின்னளந்தறிதல்"
(14) "நின்னடி உள்ளிவந்தனன்" } திருமுருகாற்றுப்படை வரி. 278, 279
(15) "நின்வண்புகழ்" (ஷை வரி. 285.)

இங்ஙனம் "நின்" என்று வழங்கியதே பழமை என்க. அது பிற்காலத்தில் "உன்" என்று வழங்கலாயிற்று. தொல்காப்பியர் காலத்தே "நும்" என்பதே வழங்கிற்று என்பது.

"நும்மென் இறுதி இயற்கையாகும்" (எழுத்து. 187)

"நும்மின்திரிபெயர் வினாவின் பெயரென்று
அம்முறை யிரண்டும் அவற்றியல் பியலும்" (சொல். 143)

என்னுஞ் சூத்திரங்களால் அறியப்படுவது. "நும்" என்பது வருமொழியின் முதற்கண்வர நிலைமொழி யீற்றில் ஓர் னகரம் இருப்பின், அது "னும்" என மாறுதல் கண்கூடு. "னும்" என்பதை "ன் + உம்" எனப் பிரித்தலுங்கூடுமன்றோ? அங்ஙனமே பிற்காலத்தார் மயங்கிப் பிரித்தாற்போலும்! புறநானூறு 58-ஆஞ் செய்யுளில் "இன்னுங் கேண்மினும் மிசை வாழியவே" என ஓரடி வந்துளது. அதனை "கேண்மின் நும் இசை எனவும், "கேண்மின் உம் இசை" எனவும் பிரித்தல் கூடுமன்றோ? நும் இசை யெனப் பிரிக்கவேண்டியவாறு பிரிக்காது, உம் இசை யென்றாற்போலப் பிழைபடப் பிற்காலத்தார் சிலர் பிரித்து ஓதினராக, "உம்" என்பதே தக்க சொல் என நாளடைவில் மயங்கி, அதனையே பலர் ஆளத்தொடங்கியிருத்தல் வேண்டும். ஆகலின் பழஞ்செய்யுட்களிற் காணப்படாத "உம்" என்ற இவ்வழக்கு புறநானூறு முதலான தொகை நூல்களில் உள்ள நக்கீரர் பாடல்களிற் காணப்பட்டிலது. "எம்" என்ற

பன்மைத்திரிபெயர்க்கேற்ப "என்" என்ற ஒருமைத் திரிபெயர் உளதாதல் போலவும், "தம்" என்ற திரிபெயர்க்கேற்ப "தன்" என்பது உளதாதல் போலவும், "உம்" என்ற பன்மைத்திரி பெயர்க்கேற்ப "உன்" என்ற ஒருமைத்திரிபெயரும் உளதாதல் வேண்டும் என்னும் பிறழ்ச்சி யுணர்வான் பிற்காலத்தே "உன்" என்பது பயிலத்தொடங்கி யிருத்தல் வேண்டும். ஆகலின் புற நானூறு முதலிய பாடற்றொகைகளிற் காணப்படாத "உன்" பிற்காலப் பாடல்களிற் காணப்படுவதாயிற்று.

"நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் அகரம் ஒற்றுகும்மே" (எழுத்து. 179)

என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தான், நின் என்பதே பண்டை வழக்கு என்பது தேறப்படும்.

திருக்கண்ணப்பதேவர் திருமறத்தில் "உன்" என்பது ஆளப்பட்டுளது என்று பின் வருபவற்றால் அறியலாம்:—

(1) உற்றது கேட்டருள் உன்றனக்கு அழகா (வரி. 79)
(2) என்றும் உன்றனக்கினிதே (வரி. 87)
(3) அவியே இது வெனக்கு; உனக்கு...காட்டுவன் (வரி. 113)

"உம்" என்பது கைலைபாதி காளத்திபாதி யந்தாதியில் ஆளப்பட்டுளது:—

"உம் ஆவி தன்னைக் குடைந்துண்ண எண்ணிய வெங்கூற்றம்
(3-ஆம் செய்யுள்)

இப்பனுவல்களில் வரும் இவ்வழக்கு நக்கீரர் இயற்றிய புறநானூற்றுப் பாடல்கள் முதலானவற்றுட் காணப்படுவ தொன்றன்று.

இனி, று என்னும் விகுதிமுன் அன்சாரியை வந்து வினைமுற்றுகள் முடிவுபெறுவது அகநானூறு, முதலாய பழைய தொகை நூல்களில் வரும் நக்கீரர் பாடலில் மிக்குக் காணப் படுகிறது. திருமுருகாற்றுப்படை யொழிந்த பிறபதினோராந் திருமுறைச் செய்யுட்களில் இவ்வழக்கு நக்கீரரால் ஆளப்பட் டிலது. உதாரணம்:—

(1) வண்ணங் கொண்டன்று கொல்லோ (அகம் 57 வரி 13)
(2) கல் சேர்ந்தன்றே பல்கதிர் ஞாயிறு (ஷை 120 வரி 5)
(3) நுதல் பசந்தன்றே (ஷை 227 வரி 1)

(4) நோதக்கன்றே (குறுந்தொகை 78 வரி 4)
(5) விரிந்தன்று (திருமுருகாற்றுப்படை வரி 92)
(6) கொடுத்தன்று (ஷ வரி 94)
(7) வேட்டன்று (ஷ வரி 100)
(8) கூதிர்நின்றன்று (நெடுநல்வாடை வரி 72)

"அர், ஆர், ப எனவரூஉ மூன்றும், பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே" (சொல் 206) என்னும் தொல்காப்பிய விதியால், அர்கள் ஆர்கள் என்ற வாய்பாட்டிற் பிற்காலத்தில் முடிந்ததுபோல் தொல்காப்பியர் காலத்து முடிந்ததில்லை என்பது புலனாகும். பழைய இலக்கியங்களில் உயர்திணைப் பல்லோர் படர்க்கைச் சொற்கள் "அர்" ஈறுபெற்று நின்றனவே யன்றி, "அர்கள்" என இற்றுநின்றில. "அர், மேல், கள்" அடுக்கிநின்ற சொற்கள் நக்கீரர்பாடிய அகநானூற்றுச் செய்யுள் முதலானவற்றுள் இல்லை. உதாரணம்:—

1. வளங்கெழுகோசர் (அகம் 205 வரி 9)
2. களங்கொள்மள்ளர் ,, 227 ,, 11.
3. தொடைத்தார் மழவர் ,, 249 ,, 12.
4. வாடாப்பூவிற்கொங்கர் ,, 253 ,, 4.
5. கைவண்சோழர் ,, 369 ,, 13.
6. இளையருஞ்சூடிவந்தனர் (நற்றிணை 367 வரி 10)
7. நோயின்றி யன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையுமேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் (திருமுருகாற்றுப்படை ,, 143 145)
8. இருகோட்டறுவையர் (நெடுநல்வாடை வரி 35)
9. கூந்தல் மகளிர் கோதைபுனையார் ,, ,, 53)
10. யவனர் இயற்றிய.....பாவை ,, ,, 101)
11. ஆடவர் குறுகா அருங்கடிவைப்பு ,, ,, 107)

இவற்றின் மாறாக "அமரர்கள் தலைவனை" என்று பெருந்தேவ பாணியிற் காணப்படுகின்றது. பதினோராந் திருமுறையில் கோக்கப்பட்டுள்ள நக்கீரர் பாடல்கள் வேறுசிலவற்றுள்ளும் இம்மாறுபட்ட வழக்குக் காணப்படுகின்றது. உதாரணம்:—

1. கற்றவர்கள் (கைலைபாதி காளத்திபாதி. செய். 2)
2. கொன்றை சூட்டுமின்கள் ,, 36.
3. பத்தர்களைக்கண்டால் பணிந்தகலப்போமின்கள் ,, 86.

4. தேவாசுரர்கள் (போற்றித்திருக்கலி வெண்பா வரி 12)
5. போருகந்த வானவர்கள் ,, 14.
6. வானவர்கள் தாம்கூடி ,, 18.
7. தானவர்கட் காற்ருது தன்னடைந்த நன்மைவிறல் வானவர்கள் வேண்ட மயிலுருங்கோனவன் ,, 31.
8. நினைந்து நிற்பாற்கள் ... அத்தனடி சேர்வார்கள் ,, 44 45.
9. நாறுதண் கொம்பரன்னீர்கள் (திருவலஞ்சுழி மும்மணிக்கோவை ,, செய். 12)

மேலும், நக்கீரர் பாடிய செய்யுட்களாகப் புறநானூறு, நற்றிணை முதலானவற்றுட் காணப்படுகின்றவற்றில் கின்று, கிறு ஆகிய நிகழ்கால இடைநிலைகள் காணப்பட்டிலவாக, பதினேராந் திருமுறையில் அடங்கிய கைலைபாதி காளத்திபாதியந்தாதியிலும், ஈங்கோய் மலையெழுபதிலும் திருவலஞ்சுழி மும்மணிக்கோவையிலும் "கின்று" நிகழ்காலம் உணர்த்த ஆளப்பட்டுள்ளமை காண்கின்ரேம். உதாரணம்:—

1. பொழுது கழிக்கின்ருர் (கைலைபாதி. செய். 12)
2. தலைவதடு மாறுகின்றேன் ,, 16.
3. காணுது அலக்கின்ருர் ,, 18.
4. வெள்ளெலும்பு பூண்கின்றது ,, 51.
5. ஒன்ருகி மீண்டு பலவாகி நிற்கின்ருன் ,, 67.
6. செறிகின்ற தீவினைகள் எல்லாம்......போம் ,, 74.
7. போகின்ற மாமுகிலே ,, 75.
8. அடியேற்கு அருளாது ஒழிகின்றது என்பாவமே யன்ருே ,, 76.
9. தீங்கையடுகின்ற காளத்தி யாள்வாய் நான்நல்ல பணிகின்ற வண்ணம்பணி ,, 96.
10. பையப்போ என்கின்ற பாவனைசெய் என்கோ (ஈங்கோய்மலை. செய். 12)
11. ஆள்கின்ற வண்ணல் (திருவலஞ்சுழி. செய். 3)
12. கானவர் வாழ்கின்ற சேணெறி ,, 12.

திருவெழுகூற்றிருக்கையில் வாசகம், கீதம், பாதம், பரமேட்டி, வேதியன் என்ற வடமொழிச் சொற்கள் வந்துள்ளமையாலும், கோபப்பிரசாதத்தில் நிதி, குபேரன், ஈசன், கோபப்பிரசாதம், பரமன், மூர்த்தி, கரதலம், சிவலோகன், தேவதேவன், பாவநாசன், சோதி, சித்திரம், ஞானம், மூர்க்கம், ஆகியவை வந்துள்ளமையாலும், அவ்விரு பிரபந்தங்களும் பிற

காலத்தவையென்று வாதிக்கக் கூடுமாயினும், மேலேகண்ட நால்வகையானும் அவை பிற்காலத்தவை என்று நிறுவ இடமில்லை. கண்ணப்பதேவர் திருமறத்தில் தவம், தீவகம், புண்ணியபாதம், அர்ச்சனை, முத்திரை, மந்திரம், பிரான், குணம், மாதவன், லிங்கம், கதி என்ற சொற்களும், பெருந்தேவ பாணியில் சூலபாணி, நீலகண்டன், பரமயோகி, தேவதேவன், வேதகீதன், பாவநாசன், பரமேச்சுவரன், ஆதிமூர்த்தி, சாதி, சோதி, வேதவிச்சை, புண்ணியமூர்த்தி, பிராணி, நிமலன், ஈசன், தருமன், பிரமன், சுந்தரவிடங்கன், நீதி, வரதன், தீர்த்தம், பத்தி, முத்தி, தேவாதிதேவன், திக்கு என்ற சொற்களும் வடமொழியினின்று வந்து வழங்கியுள. போற்றித் திருக்கலிவெண்பாவிலும் புண்டரீகம், பாதம், அண்டரண்டம், பூசித்த, வரம், கோபம், மந்திரித்த மந்திரம், தேவாசுரர்கள், சிரம், இலிங்கம், சக்கரம், வேதம், சேனாபதி, அந்தகன், பவம், பாவனை, தக்கிணம், மகுடம், போனகம், ஆகிய வடமொழிச் சொற்கள் வந்துள. இம்மூன்று பிரபந்தங்களையும் மேலே கண்ட நால்வகையான் நோக்குழி, இவை பிற்காலத்தவை என்று தோற்றுதலால், வடமொழிச் சொற்களை நிரம்பப் பெற்றுள்ளமை அக்கருத்தை வலியுறுத்தும் என்க. ஆனால், நக்கீரர் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்றில் (189) யாமம் என்பதும், மற்றொன்றில் (56) சடையென்பதும், திருமுருகாற்றுப்படையில் தெய்வம், திலகம், நியமம், மந்திரவிதி, கலிங்கம், அங்குசம், வதுவை, மதம், பலி, நகர், யூகம் என்பனவும், நெடுநல்வாடையில் அமயம் (75) தெய்வம் (77) நகர் (90) தசநான்கு (115) கலிங்கம் (134) உரோகிணி (163) யாமம் (186) என்பனவும் வந்துள்ளமையால், வடமொழிச்சொல் வழக்குண்மை ஒன்றுகொண்டே ஒரு நூலின் காலத்தைத் துணிதல் தக்க தன்றெனத் தோற்றுகின்றது.

எனவே, வடமொழிச் சொற்களைப் பெற்றுள்ளமையால் திருமுருகாற்றுப்படை யொழிந்த பதினோராந் திருமுறைச் செய்யுட்கள் நக்கீரர் பாடியன பிற்காலத்தன என மொழிகின்றிலம். அவைதம்முள், "காரெட்டு" என்ற தலைப்பின் கீழ்க் காணப்படும் வெண்பா எட்டனுள் பாசுபதன், அரவிந்தம், கண்டம், அண்டம், ஆதி என்ற வடமொழிச்சொற்கள் காணப்படுகின்றதொன்று நோக்கியே அது பிற்காலத்ததென்றல் ஆகாது. காரெட்டு, திருவெழுகூற்றிருக்கை, கோபப்பிரசாதம், என்றவற்றுள் "உன்" "அர்கள்" "கின்று" ஆகியவற்றுள்

ஒன்று தானும் ஓரிடத்தும் ஆளப்படாமையால் அவற்றை எழுதிய நக்கீரர் இன்னார் எனத் துணிந்து கூற ஒண்ணாது. அம் மூன்று பாச் செய்யுட்களும் திருமுருகாற்றுப்படையும் ஒழிந்த ஏனைய பெருந்தேவபாணி, திருக்கண்ணப்பதேவர் திருமறம், கைலைபாதி காளத்திபாதி யந்தாதி, திருஈங்கோய் மலையெழுபது, போற்றித் திருக்கலிவெண்பா, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை என்னும் ஆறும் இயற்றிய நக்கீரர் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்னுந் தொகைகளிற் காணப்படும் சில பாக்களையும், திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் இவ்விரண்டையும் இயற்றிய நக்கீரரினும் வேறுபட்டவர் எனத் தோற்றுகிறது. திருவிளையாடற்புராணம் முதலாய சில புராணங்களிற் காணப்படுங் கதைகள் பொருத்தமற்றுப் போகும் என்ற ஒரு செய்தியே கருதிச் சங்கப்புலவராய நக்கீரனாரே பதினோராந் திருமுறையிலுள்ள ஐயமுறத்தக்க இப்பாக்களையும் இயற்றினார் எனக் கோடல் எத்துணைப் பொருத்தமுடைத்து என இனிச் சிந்திக்கவேண்டும்.

நக்கீரர் ஒருவரேயாக, இருவரேயாக; அச்செய்தி ஐயமற இன்னும் நிறுவப் பெறவில்லையெனினும், மேலே காட்டப்பட்டவாற்றால் இருவகை நக்கீரர் சொன்னடை பாச்செய்யுட்கண் உள்ளது என்பது மறுக்க ஒண்ணா உண்மை என்று அறியப்படும்.

# ஆரியமுந் திரவிடமும்.

[திருவாளர், கோவை. தி. அ. இராமலிங்கஞ்செட்டியார் அவர்கள் 21-3-1940-இல் திருப்பதியிற் கூடிய இந்தியக்கலைமாநாட்டில் ஆற்றிய வரவேற்புச் சொற்பொழிவின் ஒரு பகுதி]

இக்காலத்தே பழமையாய்வோரும் படிப்பாளிகளும் உலகத்தினின்று விடுபட்டுத் தனித்து வாழ்தலுடையரல்லர். அவருழைப்பும் கொள்கைகளும் அவர் கனவிலுங் கருதாத இயக்கங்கட்கும் விளைவுகட்கும் இடமாகின்றன. இதையறிய ஜெர்மானியர் தம் ஆரியமேன்மைக் கொள்கையால் பிறரைத் தாழ்த்த உரிமை கொண்டாடுதல் போதிய எடுத்துக் காட்டாகும். இவ்வாறான விளைவுகள் ஓரளவில் பல துறைகளிற் காணப்படுகின்றன. இவை எதிர்பாராத, விரும்பாத, முடிவுகளைக் கொணரலாம். அறிஞர் வெளியிட்ட சில கொள்கைகளை நாம் நம்பத்தக்க உண்மைகளெனத் தெளிவது மிகவும் இரங்கத் தக்கது. அறிஞர், அவை ஆராய்ந்து முடிவுகாண வேண்டியவை என்றே கருதுவர். சென்ற நூற்றாண்டில் **ஆரியம், திரவிடம், சேமிடிக்** முதலிய மொழிப்பிரிவுகள் செய்த மொழிநூற் புலவர், அம்மொழிகளையாளுங் கூட்டத்தாருண்மை, அவர் தம்வாழ்க்கை, நிலம் முதலியவற்றைப் பற்றியும் கருதினர். ஆசிரியர் **சேர்கியஸ்** (Sergius) முதலான பல மொழிநூற் புலவர் மத்தியதரைக் கடலகத்து மக்கட் கூட்டத்தைப்பற்றியும், பிற கூட்டங்கள் பற்றியும் வெளியிட முனைந்த கொள்கையை மறுத்தனர். **எகிப்து, அசிரியா, பாபிலோனியா, சால்டியா** நாடுகளில் நிலந் தோண்டி யாய்ந்தபின் ஆரியர் என்னுங் கூட்டத்தாரின் தனித்த நிலையும் உயர்வும் ஐயப்பாடுறுதற் பாலனவாயின. அண்மையிற் குடைந்த **மகஞ்சோதாரோ, ஹாரப்பா** முதலிய இடங்களிற் கண்ட பலவின் விளைவுகள் ஆரியருக்கு முன்பிருந்த நாகரிகம் ஒருகால் ஆரிய நாகரிகத்தினும் மிகவும் முன்னேறியிருந்ததோ வென்றும், ஆரியர்கள் கற்றுக் கொடுத்ததைவிடக் கற்றுக் கொண்டதுதான் மிகுதியோ வென்றும் எண்ணும்படி யாக்கு கின்றன. ஆசிரியர் **மாக்ஸ் மூலரும்** பிற மொழிநூலறிஞரும் எண்ணியாங்கு, மொழிநூல், உடலமைப்பாய்ச்சி, பழையன காணலிவைஒன்றோடொன்றுகலந்து உலகம், உலகமக்கள், அவர் தம் போக்கு வரவு, அவர்களிடை ஒருவர்க்கொருவர் கொண்ட உறவு, இவற்றைப்பற்றிய வரலாறுகளை அறிவிக்க இயன்றிலது.

மத்தியதரைக் கடற்கரையிலும், வட இந்தியாவிலும் உயர்ந்த நாகரிகமுடைய மக்களிருந்தால் நாகரிக மேன்மை புறம்பே யிருந்து ஆரியரோடு வந்ததென்று கூறுவதின்றியமையாததா? இந்தியாவிலேயே தெற்கிருந்து வடக்கும், கிழக்கிருந்து மேற்கு மாவது எதிரிடையாகவாவது அம்மேன்மையடைந்ததெனல் தகுவதேயன்றோ? இப்போது கொண்டுள்ள காலவறுதி ஒப்பத்தக்கதெனக் கொள்ளின் ஆரியர் இந்நாட்டிற்கு மிகவும் பிந்திவந்தவரெனல் சாலும். தென்னிந்தியாவில் பண்டு தொட்டுத் தெற்கில் ஒருபெரு நிலப்பரப்பிருந்ததென்றும், அதன் ஒருபகுதி கடல்கோட்பட்டதென்றும், அந்நிலப் பரப் பின் நாகரிகம் முதன்முதலிலறியப்படுகிற அந்நிலத்தே தோன்றி வளர்ந்த சிறந்த நாகரிகமென்றும் வழக்கிருந்து வரு கிறது. இந்தியாவிலெங்குங் காணமுடியாத சிறந்த போக்கும், வாழ்க்கை மகிழ்ச்சியும், வாழ்க்கையின் பல கொள் கைகளும், நடத்தைகளும் பழந்தமிழிலக்கியங்களில் படம் பிடித்துக் காட்டப் பெற்றிருக்கின்றன. தென்னிந்திய மொழி கள், பழங்கொள்கையான வரலாறுகள், நாட்டுப்புறக்கதைகள் முதலியன மிகவும் சிற்றளவில் கருதப்படுவது இரங்கத்தக்கது. அன்றியும் தென்னிந்தியாவில் நிலத்தைத் தோண்டி யாய்தலை மேற்கொள்ளவேயில்லை. ஆரியர் கற்றுக்கொடுத்தோரென்றும், ஆரியமொழி (சம்ஸ்கிருதம்) பிறமொழிகட்கு ஆக்கந் தந்ததென் றும் வெளியிட்ட சில கருத்துக்கள் விளங்கித்தோன்றும் உண் மைகளென எண்ணப்பட்டுப் பிறவழிகளாலும் பிறமொழிகளி லிருந்தும் அறியப்படுவன ஒதுக்கப்பட்டும், அறியமுடியாமலும் ஆனதற்குக் காரணமாயின. அங்ஙமிங்குமாகச் சில கிறிஸ்தவப் பாதிரிகளும், அரசியலதிகாரிகளும் இந்நிலையைத் தடுக்கமுயன் றனராயினும் நேற்றையவரை தென்னிந்தியர் வாழ்க்கை, நாக ரிகப், ஆரியவாழ்க்கை நாகரிகத்தினின்று வேறானதென்று வெளியிடப்பட்ட கொள்கையை எவரும் கருதத் தக்கதாகக் கொள்ளலாயினர்.

இந்தியாவிலுள்ள பலமக்களும் மிகவும் கலப்படமாக விருந்தாலும், பிறப்பால் உயர்வுதாழ்வுகொண்டு மக்களைப் பகுத்த பிரிவுகள் சிலர்தாம் ஆரியரென்றும், தம் ஆரிய மொழி மிகவும் உயர்ந்ததென்றும், அம்மொழியினரும் நாகரிகத்தினரு மானதாம் பிறரினும் உயர்ந்தவரென்றும் உரிமை கொண்டாடச் செய்துள்ளன. இச்சாதிப் பிரிவுகளும், பகைமையும் தென் னிந்தியாவில் முதன்மை பெற்றும் மூண்டும் இருக்கும் இக்

காலத்துக் கெட்டநிலைக்கு இவ்வுரிமை கொண்டாடுதல் பெரும் பான்மையும் காரணமாயிற்று. தென் ஐரோப்பாவிலும் நடு ஐரோப்பாவிலும் இலத்தீன்மொழி நடுக்காலத்தில் இருந்த நிலையை ஒப்பாக்கி, ஆரியம் இந்தியாவிலுள்ள மொழிகளுக் கிடையில்அந்நிலையிலிருந்ததோஎனச் சிலர்கருதலாம். தென்னிந் தியாவில், ஆங்கிலேயர் ஆளுகை தொடங்குமுன், ஆரியமிருதி களையும், அவற்றிற் கூறப்பட்டுள்ள வாழ்க்கைக் கொள்கை களையும் எத்துணைமுயன்றும் கைக்கொள்ளச்செய்யமுடிந்திலது. ஆங்கிலர் ஆளுகை நிலைத்தபின் அவரேற்படுத்திய நீதி மன்றங் களில் ஆரியமொழியினர் வழக்காடுவோராயும், வழக்குநடுவராயு மிருந்து மிருதிகளில் கூறப்பட்டுள்ள வாழ்க்கை வரம்புகளைத் தென்னிந்தியாவில் நுழைத்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் அவ்வாறு செய்வது இழிந்த உட்கருத்துக்களோடென்று கூறல் தகுதியாகாது. பலவிடங்களில் நாட்டுவழக்கமறியாமல் தமக்குத் தோன்றியதைக்கொண்டு முடிவு கட்டுகின்றனர். வேறுபல விடங்களில் தாம் சிறந்த அறிவுக்குப் பொருந்திய முறையைக் கற்றுக் கொடுப்பதாக நம்பிச் செய்கின்றனர். இதன்முடிவோ வெனின், சிராத்தம்செய்யாத ஒருகுடும்பத்தில்இறந்தவருடைய உடைமைக்குரியவரை மிருதியில் இறந்தவர்க்கு எவர் சிராத்த பிண்டமிட உரியவரென எங்காவது கூறப்பட்டிருப்பதைக் கொண்டு முடிவுகட்டுதல் போன்ற நகைவிளைக்கும் முடிவும், பார்ப்பனன் பார்ப்பனரல்லாத சாதிப்பெண்ணை மணத்தல் ஒப்பத்தக்கதாயும், பிறன் பார்ப்பனப் பெண்ணை மணத்தல் ஒப்பத்தகாததாயும் கொள்ளலும் முதலியனவாம். நால்வகைப் பிரிவுகள் (வருணங்கள்) தென்னிந்தியாவில் மக்கள் வாழ்க்கை முறையில் ஒப்பப்பட்டனவாகக் கொள்ளப் படுகின்றன. அவற்றையடிப்படையாகக்கொண்டாக்கிய விரிவான பலமுறை களைக்கொண்டு கூட்டம், குடும்பமிவற்றின் பழக்கவழக்கங்கள் முடிவு செய்யப் படுகின்றன. இந்நாட்டில் நால்வகைப் பிரிவு என்றும் காலவழக்காக விருந்திலதென்பதனை மறந்துவிடுகின்ற னர். ஆரிய மொழியினரான சில தமிழ் நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும் சாதிப்பிரிவுகளைக் கொண்டு எழுதின ரேனும் அவ்வகையான பிரிவுகள் தமிழ்நாட்டிலென்றுந் தழுவப் பட்டில. ஆரியர் இந்நாட்டரசர்க்கு அறிவுரைகூறுவோரான போதும், பிறவழிகளால் ஆள்திறம் பெற்றபோதும் சில தமிழ் நாட்டுச்சாதிகள் பூணூலணிந்தும், தம்மைப்பார்ப்பனர், அரசர், வணிகரெனக் கூறிக்கொண்டும் நால்வகை வருணத்தராகி முன்னேற முயன்றன. இதனால் முன்னிலும் சமூகக்கட்டுப்

பாடுகள் உறுதிப்பட்டன. ஆரியவருணந் தழுவியவரைத் தங் குழுவினின்று புறம்பாக்கினர்; வலக்கைப் பிரிவுச் சாதிகட்கும் இடக்கைப் பிரிவுச் சாதிகட்கும் பூசல் மிக்குச் சென்ற நூற் றாண்டில் முதன்மைக்கு வந்தது. பழைய வழக்கத்தை மாறாது கொண்டவரான பதினெட்டுச்சாதிகள் ஒரு பிரிவாகவும் தமிழ ரல்லாதாரும், தம்மைப் பார்ப்பனரென் றெண்ணிய பொற் கொல்லரும், அரசவருணத்தரென்றான நாடாரும், வணிக வருணந் தழுவிய வாணியரும் மற்றொரு பிரிவாகவும் பிரிந்தனர். ஆரிய வருணந் தழுவியோர் சாதிவிலக்குக்காளாகி மிகவும் இழிவாக மதிக்கப்பட்டனர். தமிழராயிருந்து ஆரிய வருணந் தழுவியோர் கோயிலில் நுழையவும் உரிமையிலராயினர். இக்காலத்தே வருணப்பிரிவுகள் வாழ்க்கை முறைகளாகக் கொள்ளப்படுகின்றன. சில சாதிகள் தம்மை வைசியர் என்று கொண்டு உயர்வடைய முயல்கின்றனர். சில நாட்டுக்கோட்டை நகரத்தார் தம்மைத் தனவைசியரென்றும், வேளாளரிற்சிலருங் கூடத்தம்மைப் பூவைசியரென்றும் அழைத்துக்கொள்ள விரும்பு கின்றனர். நம் இந்தியநாட்டின் முன்னேற்றத்திற் கின்றி யமையாத ஒற்றுமை புணர்ச்சி பிறப்பதற்கும் பகைமைகள் தணிந்து மறைவதற்கும் தென்னிந்திய வாழ்க்கை நாகரிகத்தைப் பல வழிகளிலும் ஆய்ந்து நன்குணர்தலும், சாதிப்பிரிவுகட்குக் காரணமாயிருந்த மதசமூக நிலைமைகளையாய்ந்து காணலும், அச்சாதிப் பிரிவுகளைப் பற்றி நிலவும் தப்புக் கொள்கைகளைத் திருத்துதலும் மிகவும் இன்றியமையாதனவாம். விரைந்துதீர்க்க வேண்டியுள்ளவை யாதலால் இக்கருத்துக்களை வெளியிடுவதற்கு என்னுளமவாவிற்று; இவை என்னுளத்தில் தோன்றியன; அறிஞர்களாகிய நீங்களே சிறந்த நல்ல வழிகளைக் காட்டக் கூடியவர்கள்.

# பத்தாவது இந்தியக்கலை மாநாடு, திருப்பதி.

## தமிழ்ப் பிரிவு.

22—3—40 காலை 9 மணிக்குத் தமிழ்ப பிரிவின் கூட்டந் தொடங்கிற்று. திவான்பகதூர். பி. சுப்பையாமுதலியார் தலைமை பூண்டார்கள். திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் கடவுள்வாழ்த்துப் பாடினார்.

தலைவர் தம் தலைமையுரையில் தமிழிலக்கியப் பழமை, சிறப்பு, தமிழர்நாகரிகம், அவர் தம் மேன்மையான உளப் பண்புகள் இவற்றை எடுத்துக் கூறித் தமிழிலக்கியங் கற்றல் உலகத்தே அன்புவழிகாட்டி நன்மை பயக்குமெனக் கூறினார்கள்.

தமிழ்ப்பிரிவுக்குப் பல்வேறு பொருள்களைப் பற்றி அறிஞர்கள் பதினேழு கட்டுரைகள் எழுதியனுப்பியிருந்தனர். கட்டுரைகளும் ஆக்கியோர் பெயரும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

1. அரசகவிகள் (கீழ்நாடும் மேல்நாடும்)
2. வேதங்களும் ஆகமங்களும்—சி. கே. சுப்பிரமணிய முதலியார்
3. கருவூரைப்பற்றிய சில குறிப்புகள்
4. கொங்குநாட்டின் உடையும் அணிகளும்
5. கொங்குநாட்டுப் பண்டிகைகளும் வேடிக்கைகளும்
6. சில தனிப்பட்ட கொங்குநாட்டு வழக்கங்கள்
7. கொங்குநாட்டுக் கதைகள்-இராவ்பகதூர். சி. எம். ராமச்சந்திரன் செட்டியார்
8. தமிழ்ப்பண்பின் நிலைக்களம்–(Foundation of Tamil Culture) P. S. நாயுடு
9. தமிழிலக்கியத்தில் 'கர்நாடகம்'—வி. ஆர். ஆர். தீக்ஷிதர்
10. பழங்காலத்துத் தென்னிந்தியப் படைகள், அவர்தம் அவை, அவையின் வேலைகள்—கே. எஸ். வைத்தியநாதன்
11. வேங்கடம்—A. M. சடகோபராமாநுஜாச்சாரி
12. நக்கீரர் சொல்—A. சிதம்பரநாதன் செட்டியார்
13. தொல்காப்பியர் மதம்—இராவ்சாகேப். S. வையாபுரிபிள்ளை
14. சங்ககாலத்துக் கடவுள் வழிபாடு—E. S. வரதராசையர்

15. பரதனது உதாரணம்—சீனிவாசராகவச்சாரி
16. ஐரோப்பியர் தமிழுக்குச் செய்தவை—C. பன்னிருகைப் பெருமாள் முதலியார்
17. தமிழரும் தமிழகமும்—துடிசை. சிதம்பரமுதலியார்

சி. கே. சுப்பிரமணியமுதலியார், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. எஸ். நாயுடு, A. சிதம்பரநாதன் செட்டியார், ஏ. எம். சடகோபராமாநுஜாச்சாரி, E. S. வரதராஜையர் இவர்கள் தம் கட்டுரைகளைப்பற்றிச் சுருக்கமாகப் பேசினார்கள். எல்லாக் கட்டுரைகளும் படித்தனவாகக் கொள்ளப்பட்டன.

தி. ஸி. சீனிவாசையங்கார், தலைவர் நல்லாடை. சுப்பையா முதலியாருக்கு நன்றிகூறினார். காலை 11 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

---

## தமிழ்ச் சங்கம்

திருப்பதியில் நடந்த பத்தாவது இந்தியக்கலைமாநாட்டின் சார்பில் 22—3—40 மாலை $1\frac{1}{2}$ மணி முதல் 5 மணி வரை தமிழ்ப்புலவர், ஆராய்ச்சியாளர், இவர் தம்கூட்டம் ஒன்று கூடிற்று. கூட்டத்தில் 'வஞ்சிமாநகர்' குறித்துப் போரிடுவ தாக முன்பே முடிவுசெய்யப்பட்டிருந்தது. வரலாற்றுத் துறை யாராய்ச்சியாளர்களும் மலையாள மொழி வல்லுநரும் சொற் போரிற் கலந்துகொண்டனர்.

இச்சங்கத்தைச் சிறப்பாக நடத்துவதற்குத் தருமபுர வாதீனத்துப் பண்டாரசந்நிதியவர்கள் ஆயிர ரூபாயும், திருவா வடுதுறையாதீனத்துப்பண்டாரசந்நிதியவர்கள் முந்நூறு ரூபா யும் நன்கொடையளித்து உதவிசெய்தனர்.

அகில இந்திய ஒலிபெருக்கியின் திருச்சி நிலையத்தார் இச் சங்கப் பேச்சுக்களை ஒலிப்பதிவு செய்துகொண்டனர்.

SIR. R. K. **சண்முகமவர்கள்** முதன்முதலில் தமிழ்ச் சங்கத் தில் 'வஞ்சிமாநகர்' பற்றியாய்வது சிறந்ததென மாநாட்டை நடத்துவோரிடம் தெரிவித்திருந்தார். தி. அ. இராமலிங்கஞ்

செட்டியார் முன்னிருந்து மிகவும் ஊக்கிச் சங்கத்தைச் சிறப்பித்தார். சி. கே. சுப்பிரமணிய முதலியார் சங்கத்தைக் கூட்டுவோராயிருந்து பணியாற்றினர். டி. வி. சீனிவாசய்யங்கார் சொற்போரின் உற்றுநோக்குவோர் (Observer) ஆக இருந்து இறுதியில் அறிஞர் வெளியிட்ட பல கொள்கைகளையும் தொகுத்து விளக்கமாக உரைத்தார்.

தி. அ. இராமலிங்கஞ்செட்டியார், தமிழ்ச்சங்கங் காட்டிய நோக்கத்தைத் தெரிவித்து, நல்லாடை. திவான்பகதூர், P. சுப்பையா முதலியாரைத் தலைமைபூண வேண்டினர். தலைவர் அறிஞர்களைச் சுருங்கியகால அளவில் அவரவர் கொள்கைகளை வெளியிடக் கூறினர். பின்வருமறிஞர்கள் பேசினர்கள் :—

1. டாக்டர் சி. அச்சுதமேனன்
2. இராவ்சாகெப் எம். ராகவையங்கார்
3. சி. கே. சுப்பிரமணிய முதலியார்
4. ந. மு. வேங்கடசாமி நாட்டார்
5. வி. ஆர். ஆர். தீட்சதர்
6. டாக்டர் கோதவர்மா
7. எ. எம். சடகோபராமாநுஜாச்சாரி
8. சி. பன்னிருகைப்பெருமாள் முதலியார்
9. ஜோசப் முண்டசேரி
10. இராவ்பகதூர் சி. எம். ராமச்சந்திரன் செட்டியார்.
11. ரா. ராகவையங்கார்
12. அநுஜன் அச்சன்
13. டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்

தலைவர் தம் முடிவுரையில் இப்பொருள் குறித்து இப்போது முடிவுக்கு வருதலியலாதென்றும், இன்னும் பலசான்றுகளையறிஞர் பலருந்தொகுத்து ஒருவரோடொருவர் கலந்து ஆராய்ந்து முடிபு காணுதற்கு வேண்டியன செய்வரென நம்புவதாகவும் கூறினர்.

வி. வி. சீனிவாசய்யங்கார், தலைவருக்கும், தருமபுரம், திருவாவடுதுறை மடாதிபதிகட்கும் நன்றிகூற மாலை 5 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

# கலிங்கப் போரும், காலிங்க வீரரும்

திரு. ஈ. ஆர். நரசிம்ம ஐயங்கார் அவர்கள் பி.ஏ. பி.எல்., வக்கீல், சேலம்.

கலிங்க தேயத்தாரோடு பொருது வெற்றிபெற்றுச் சயத் தம்பம் நாட்டிய பெருமை இராசராசன், இராசேந்திரன், வீர ராசேந்திரன், முதற் குலோத்துங்கன், விக்கிரமன் ஆகிய பல சோழமன்னருக்குரியதாமென்பது இவ்வரசர்களின் மெய்க் கீர்த்திகளால் அறியலாகும். பின்னிருவர் நிகழ்த்திய போரை ஈண்டு ஆராயப் புகுந்தேம். கலிங்கப்போர் இவ்விருவர் மெய்க் கீர்த்திகளிலும் புகலப்படுவதால் விக்கிரமன் நிகழ்த்திய போர் குலோத்துங்கன் நிகழ்த்திய போரின் வேறுதல் வேண்டுமென் பது பெறப்படுமாயினும் விக்கிரமன் தன் மெய்க்கீர்த்தியில் "ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி" யென்று சிறப் பிக்கப் படுவதை நோக்கி இம்மன்னன் நிகழ்த்திய போர் குலோத்துங்கன் ஆட்சியின் தொடக்கத்தில் நிகழ்ந்ததாகல் வேண்டுமென்னும் முடிபை ஆராய்ச்சியாளர் கட்டிவிட்டனர். இம்முடிபையுரைத்தோர் ஆராயாது போந்த இலக்கியமும் சாசனமுமுளவாகலின் இதனை ஏற்பதற்குத் தடையுண்டெனக் கூறவியலும். இதனுன் இப்போர் வரலாற்றை மீண்டும் ஆராய் வது பயனுடையதாகுமென்று இக்கட்டுரை வரையப்படுகின்றது.

கலிங்கப்போரைப் பொருளாகக் கொண்டெழுந்த இரு நூல்களுண்டு. இவ்விருநூலும் கலிங்கப் பரணி என்னும் பெயர்பெற்றனவாகும். இவற்றுள் ஒன்று ஜெயங்கொண்டா ரால் பாடப்பட்டது. இது இப்பொழுது அச்சுவாகனமேறி நிலவியுள்ள பரணி நூல்களில் தொன்மை வாய்ந்ததென்பர். இந்நூல் பரணிகளில் தலைசிறந்து விளங்குகின்றது. இவ்வாசிரி யருக்குக் கவிச்சக்கிரவர்த்தி யென்னும் சிறப்பிடப்பட்டிருந்த தென்பது ஒட்டக்கூத்தர் வாக்குணர்த்தும். இப்பரணி முதற் குலோத்துங்கனைச் சிறப்பிக்குமுகத்தான் வரையப்பட்டு அப் போரில் படைத்தலைமை வகித்த கருணாகரன் மேம்பாட்டினையும் விளக்குகின்றது. கலிங்கப்போரில் கருணாகரனுக்கு உதவி புரிந்த படைத்தலைவர்களையும் குலோத்துங்கன் காலத்தில் நிகழ்ந்த பிற போர் வரலாற்றையும் கூறும். இந்நூல் குலோத் துங்கன் சரிதம் உணர்வதற்குச் சிறந்த கருவியாகும்.

இவ்வாறே இவன் புதல்வன் விக்கிரமசோழனும் மற்றொரு பரணியால் பாராட்டப்பட்டுள்ளான். இப்பரணிநூல் வழக்கினின்றும் இறந்தொழிந்தது. இது கிடைக்குமாயின் விக்கிரமன் சரிதம் நன்கறியலாகும். இந்நூலொன்று இருந்ததோவென்று ஐயுறுவாருமுளர். இது இறந்ததாயினும் இதன் ஆசிரியர் வரலாறு அறிய வியலும். இதனையறிவோமாயின் விக்கிரம சோழன் புரிந்த போர் குலோத்துங்கன் காலத்து நிகழ்ந்த போரின் வேறுதல் பெறப்படும். இம் முயற்சியில் தலையிட்டார் ஒருவருமின்றெனக் கூறலாம்.

முதற்கண் சாசனங்களில் கலிங்கப்போர்குறிக்கப்படுவதை நோக்குவாம். முதற் குலோத்துங்கன் கி. பி. 1070-ம் ஆண்டு முதல் 1118-ம் ஆண்டுவரையில் ஆட்சி புரிந்தான். இம்மன்னன் 26-ம் ஆண்டு, 28-ம் ஆண்டுச் சாசனங்களில் கலிங்கரொடு பொருது வெற்றிபெற்ற செய்தி குறிக்கப்படுகின்றது. செய்திவிரிவு பிற்காலச் சாசனங்களில் காண்டும். இம்மன்னன் 33-ம் ஆண்டுச் சாசனம் ஒன்று வேங்கிநாட்டு **இடர்க்கரம்பையிற்** கிடைக்கின்றது. இவ்வூர் (கிருஷ்ணா ஜில்லாவில்) **திராட்சாராமம்** என்று இப்பொழுது வழங்கப்படுகின்றது. இச்சாசனம் வடமொழிச் செய்யுளில் அமைந்துளது. இதனை மொழிபெயர்த்து இதனிற் கூறப்படும் கலிங்கப்போரை ஆராய்ச்சிப் புலமை சான்ற அறிஞராகிய ஸ்ரீமான் கே. வீ. சுப்பிரமணிய ஐயரவர்கள் "கொங்குமலர்" முதல் தொகுதியில் ஆய்ந்துள்ளார். குலோத்துங்கன் காலத்திற் கலிங்கப்போர் இருமுறை நிகழ்த்தப்பட்டதென்பதை இவ்வறிஞர் மறுக்கும் கருத்துடையவர். இவ்வாசிரியர் கருணாகரன் நிகழ்த்திய போர் கி. பி. 1078-க்கு முந்தியதாகுமென்பதனைமட்டும் கூறிப் போந்தார். இச்சாசனத்தில் திருவரங்கன் என்னும் ஒரு பல்லவ படைத்தலைவன் கலிங்கவரசனுன கங்கன், கோசலர், தேவேந்திராதியர் முதலியோரை வென்றான் என்னும் செய்தி கூறப்படுகிறது. இப்படைத்தலைவன் வண்டுவராசன் எனப்படுகிறான். இவன் கலிங்க முழுவதையும் எரியூட்டினான் என்னும் சிறப்புக்குரியவனவன். இத்தகைய வரலாறு கருணாகரனுக்கும் கூறப்படுகின்றதாகலின் திருவரங்கன் என்று இச்சாசனத்திற் கூறப்பட்டவன் கருணாகரனவன் எனவும் அவனுக்கு, திருவரங்கன் என்பது இயற்பெயராமெனவும் கூறினர். தோல்வியுற்றவர் பெயர் பரணி நூலிற் கண்ட பெயரொடு மாறுபட்டனவாகக் காணப்படுவதை நோக்கின் இப்போர் வேறுதல் வேண்டு

மெனவும் திருவரங்கன் கருணாகரனுகானெனவும் கூறவமையு மாகலின் தம் கருத்துக்குப் பிறசான்றுளவென்பதை அவ் வாசிரியர் காட்டியுள்ளார்.

இச்சாசனத்திற் கண்ட கங்கன் எனப்பட்டவன் பரணியிற் கூறப்பட்ட அனந்தவர்மனுவன். இம்மன்னன் கங்ககுலத் தவனுவன். கங்க குலத்தார் தம்மை இந்திரகுலத்தவரென்று சாசனங்களிற் கூறிக்கொள்ளுகின்றனர். அனந்தவர்மனுக்குச் சோடகங்கன் என்றொரு மறுபெயருண்டென்பது கஞ்சம் ஜில்லா கோர்ணி என்னும் ஊரில் கிடைத்த சாசனத்தால் அறியலாம். இச்செய்தி விருக்கத்துக் கேடில செப்பேட்டினும் வந்துளது. கோர்ணிசாசனம் கலிங்க நகரிலிருந்தபோது அளிக் கப்பட்டதெனத் தெரிகிறது. இதனுல் அனந்தவர்மன் தலை நகர் அறியப்படும். இம்மன்னனுக்குக் கோசலநாட்டார் துணை புரிய வந்திருந்தனர் என்னும் செய்தி பரணி நூலில் உரைக்கப் படவில்லையென்பது குறிக்கத்தக்கது. இதனைப்பற்றிப் பின்னர் நோக்குவாம். தேவேந்திர வர்மாதியர் எனப்பட்டவர் கங்கனின் சுற்றத்தாராவர். இப்பெயர் சோடகங்கனின் தகப்பனுக்கு வழங்கப்பட்டிருப்பதால் கலிங்கப்போர் அவன் ஆட்சியில் (கி. பி. 1070—1078) நிகழ்ந்ததாகல் வேண்டுமென்று இவ்வாசிரியர் கூறினர். இது பொதுப்பெயராகுமாகலின், கங்கன் காலத்தில் நிகழ்ந்தாகுமென்னலாம். இப்போர் நிகழ்ந்தகாலம் கி. பி. 1078-க்குப் பின்னராகுமெனக் கோடல் பொருந்தும், இவ்வாண்டில் அனந்தவர்மன் அரசெய்தினுகலின்.

இச்சாசனத்திற்கண்ட திருவரங்கனின் முன்னேன் சீரிளங்கோவென்றும் அவன் திருநறையூர் நாட்டு மண்டலஞ் சேரிக்குடையவனுய் இருந்தானென்றும் நற்பல்லவனென்றும் கூறப்படுகின்றுன். கருணாகரனின் மனைவியின் பெயர்கொண்ட தோர் சாசனம் கிடைத்துளது. இது வருமாறு. "கோவிராச கேசரிவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பத்து மூன்று ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தி யூராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழவள நாட்டு வண்டாழஞ் சேரியுடையான் வேளான் கருணாகரரான தொண்டைமானுர் தேவி அழகிய மணவாளனி மண்டை யாழ்வார் வைத்த நுந்தாவிளக்கு". இடர்க்கரம்பைச் சாசனத் தில் மண்டலஞ்சேரி எனப்பட்டதும் இச்சாசனத்தில் கண்ட

வண்டாழஞ்சேரி என்பதும் ஒரேயூராகும். எழுத்துப்பிழை சாசனங்களிற் காணப்படுவது உண்டு என்பதும் இடர்க்கரம்பைச் சாசனம் வடமொழி என்பதும் அறியற்பாற்று. திருவரங்கன் என்பான் கலிங்கத்துப் பரணியிற் சிறப்பிக்கப் பட்ட கருணாகரனே யாவன். கருணாகரன் என்பது குலப் பெயராகும் என்பதை பின்னர்க் காட்டுவாம்.

இச்சாசனத்திற் கண்ட போர் பரணி நூலிற் சிறப்பிக்கப் பட்ட போரே என்பதும் இது இச்சாசனத்தின் காலமாகிய கி. பி. 1103-க்கு முன்னரே நிகழ்ந்ததென்பதும் தெளிவாம். குலோத்துங்கன் 42-ம் ஆண்டில் சீனிவாச நல்லூரில் பொறிக் கப்பட்டுள்ள சாசனத்திலும் கலிங்கப்போர் குறிக்கப்படு கின்றது. போர் விரிவு கூறப்படவில்லை. குலோத்துங்கன் 45-ம் ஆண்டில் ஆலங்குடி என்னும் ஊரிற் கண்டதோர் சாசனத் தில் கலிங்கப்போர் விரித்துக் கூறப்படுகின்றது. கலிங்கர் படையில் வந்திருந்த கோமட்டையன், மாதவன், எங்கராயன், ஏச்சணன், இராசணன், தாமயன், திசைமுகன், போத்தயன், கேத்தளன் என்ற பலர் பெயர்கள் வந்துள. இப்பெயர்களில் எங்கராயன் பெயரொன்றை மட்டில் பரணியாசிரியர் கூறியுள் ளார். எங்கராயன் என்பவன் தன் மன்னனுக்குச் சோழரொடு சமாதானம் செய்துகொள்ளுமாறு யுக்தி கூறினன் என்று பரணியாசிரியர் கூறியுள்ளார். இதனால் பரணியிற் கண்ட போர் இச் சாசனத்தில் சிறிது விரிவுபடக் கூறப்படுகின்ற தென்பது உண்மையாகும். இங்குக்காட்டிய பல மன்னரின் பெயர் இடர்க்கரம்பைச் சாசனத்தில் "கோசல கண்டத்திரள்" என்று தொகுத்துக் கூறப்பட்டிருக்கிறதென்பது ஒக்கும். கருணாகரன் கலிங்கரொடு பொருது வெற்றிபெற்றது ஒரு முறையே யாகுமென்பது அறிஞரனைவரும் ஒப்ப முடிந்ததோர் கொள்கையாகும். எனவே 33, 42, 45-ம் ஆண்டுகளிற் குறிக் கப்பட்ட போர் ஒன்றேயாதல் வேண்டுமென்பது பெறப்படும். இவ்வாறே 26, 28-ம் ஆண்டுகளிற் கண்ட குறிப்பும் ஒன்றே யாகி ஆதியில் குலோத்துங்கன் 26-ம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்ததே மற்றை நான்கு சாசனங்களினும் குறிப்பும் விரிவும் படக் கூறப்பட்டதென்பது போதரும். ஒரு போரில் அடைந்த வெற்றியைப் பல்வேறு காலத்துச் சாசனங்களிற் கூறப்படுவ தோர் வழக்கும் ஈண்டறியற்பாலது. எனவே குலோத்துங்கன் காலத்தில் நிகழ்ந்த கலிங்கப்போர் ஒன்றன்றி இரண்டெனக் கொள்ளவமையாது.

இனி விக்கிரமன் காலத்துப்போர் குளம் என்னுமிடத்தில் நிகழ்ந்ததாக அவன் மெய்க்கீர்த்தி கூறுகின்றது. இது இக் காலத்தில் சீகாகுளம் எனப்படுவதாகும். விக்கிரமனால் தோல்வியுற்றவன் பெயர் தெலுங்கவீமன் என்று அம்மெய்க் கீர்த்தியால் அறியலாகின்றது. இப்போரின் காலம் கன்னியா குமரியில் கிடைக்கும் (108 of 1896) சாசனத்தாலும் வேங்கி நாட்டில் கிடைக்கும் சளுக்க மன்னனான விக்கிரமாதித்தன் சாசனங்களாலும் நன்கறியப்படுகின்றது. விக்கிரமன் மெய்க் கீர்த்தியிற் கண்ட குளப்போரும் தெலுங்கவீமன் பெயரும் கன்னியாகுமரிக் கல்வெட்டில் வந்துள. இது பராந்தக பாண் டியன் 9-ம் ஆண்டிற் பொறிக்கப்பட்டது. இப்பாண்டியன் கி. பி. 1120-ல் அரியணை யேறினான். இதனால் விக்கிரம சோழ னுக்குக் கலிங்கப்போரில் இப்பாண்டியன் துணையாயிருந்தனன் என்பதும் போரின்காலம் கி. பி. 1129-க்கு முறபட்டதென் பதும் தெளியப்படும்.

விக்கிரமாதித்தன் சோழன் பகைவனாவன். சோழருக் குரிய இடர்க்கரம்பையில் கி. பி. 1120 முதல் 1124 வரையில் இப்பகைவன் பெயருள்ள பலசாசனங்கள் கிடைக்கின்றன. குலோத்துங்கன் கலிங்கர் வலியை யொடுக்கிய பின்னர் விக்கிர மன் ஆட்சிவரையில் வேங்கிநாடு சோழராதிக்கம் பெற்று வந்தது. விக்கிரமன் கி. பி. 1118-ல் அரசெய்தினான். விக்கிர மன் ஆட்சித் தொடக்கத்தின் பின்னர் சளுக்கர் வேங்கி நாட்டைக் கைப்பற்றியிருந்தனர் என்பது விளங்கும். விக்கிரம சோழன் இச்சளுக்க மன்னனோடு கி. பி. 1124-க்குப் பின்னர் பொருது, வேங்கி நாட்டையும் கலிங்க நாட்டையும் தன் னாதிக்கத்திற்குட்படுத்தினானென்பது துணியலாகும். வீமன் என்று சாசனங்களிற் கூறப்பட்டவன் சளுக்க மன்னனின் படைத்தலைவனாவன் என்னலாம். இதனால் விக்கிரசோழன் நிகழ்த்திய கலிங்கப்போர் கி. பி. 1124-க்கும் கி.பி. 1129-க்கும் இடையில் புரியப்பட்டதென்னும் வரையறை பெறப்படும். இனி இக்கருத்துக்கு இலக்கியம் துணைபுரிவதையும் காட்டுவாம்.

(தொடரும்.)

# காட்சியளவை

திரு. த. இராமநாதபிள்ளை அவர்கள், B. A. (Lond.)
சுன்னாகம், இலங்கை.

## உளக்காட்சி

ஒரு பூதப் பொருள் விடயமாம்போது அப்பொருளினது சமுதாய மூலமாகவே அப்பொருள் உண்டென அறிகிறோம். சமுதாயத்தால் அறியக்கூடிய பொருள் பூதபதார்த்தம். சமுதாயம் என்னும் உணர்வு உள்ளத்தினாலேயே உணரப்படும். ஒரு பூதப்பொருள் உண்டென ஐம்பொறிகளாலே உணர்கிறோமாகையால் வாயிற் காட்சிகள் சில ஒருங்கு தொக்குழி ஒரு பொருள் சமுதாயமாகின்றது. ஒருபொருளின் சமுதாயம் ஒரு வாயிலாலும் பலவாயில்களாலும் உணர்த்தப்படும். ஞாதிரு என்னும் அறிபவனது முன்னிலையிற் தோற்றும் பொருட்கள் பலவாகையால் வாயிற் காட்சிகளும் கணக்கிலவாம். மக்கள் பகுத்தறியும் ஆற்றலுடையவர்களாகையால் பொருட்களைப் பெயர், சாதி, குணம், தொழில், அமைப்பு முதலியவற்றால் இது இன்னபொருளென நிச்சயித்து உணர்கின்றனர். இவ்வுணர்வு சவிகற்ப உணர்வெனப்படும். ஒரு பொருள் இங்ஙனம் ஆராயப்பட்டுப் பெயரிடப்படுமாதலின் பெயரீடு ஆராய்ச்சி நூல் யாவற்றிலும் உண்டு. ஒருவரது சந்நிதியில் அபிமுகமாத்திரையாகத் தோன்றும் பொருட்கள் எல்லாம் வாயில்களுக்கு நிருவிகற்பமாகத் தோன்றும். நிருவிகற்பக்காட்சியில் காட்சிப் பொருளின் பெயர், சாதி, குணம், தொழில், அமைப்பு முதலியவை தோற்றாமல் ஒரு பொருளின் சமுதாயமே புலப்படும். ஒருவிடயப்பொருள் இன்ன பெயருடையது இன்ன குணமுடையது என, வகுத்தறியப்பட்டு, ஒரு உளக்காட்சியாகும். நிருவிகற்பஉணர்வு சவிகற்ப உணர்வாக மாற உள்ளம் ஒரு மானதக் காட்சியை எய்தும். மானதக் காட்சி மனசினது காட்சி என விரியும். மானதக் காட்சி உள்ளக்காட்சி என்பன ஒரு பொருட்கிளவிகள்.

## 2. தன்வேதனைக்காட்சி

பூதப் பொருள்கள் அருவாகவும் உருவாகவும் நிலை மாறுகின்றன. சிந்தனைப் பொருளாகிய மானதக் காட்சி யாண்டும் அருவாகவே இருக்கும். மானதக் காட்சி எமது நினைவுலகில் நித்தமாயும் சுத்தமாயும் மாறுதலடையாமலும் இருக்கும். மானதக் காட்சிகளின், ஒப்பு வேற்றுமைகளை நோக்கிக் காலம், நியதி, வித்தை, அராகம், கலை முதலிய தத்துவங்களால் ஆன்மாவானது ஒரு தன்வேதனைக் காட்சியை எய்தும். தன்வேதனைக் காட்சி இயற்கையில் உள்ள பொருட்களின் பொதுவியல்பைக் கூறும். தன்வேதனைக் காட்சி பல பொருட்களுக்குரிய பொதுப் பண்பை ஆராய்ந்து, மொழியும் ஒவ்வொரு இயற்கைப் பொருட்களையும், மேனாட்டார் காலம், இடம், காரணகாரியம், என்னும் மூன்று தத்துவங்களாலும் ஆராய்ந்து அவற்றின் இயல்பைத் தேர்கின்றனர். ஒரு பொருளின் இயல்பைத் துணிதற்கு அப் பொருளைப் பலவிடத்திலும் பலகாலத்திலும் பலவாறு ஆராய வேண்டும். பலர் தம் முயற்சியின் பயனாக எழுதிவைத்த குறிப்புக்களையும் ஆராய்ச்சி வல்லோரின் கட்டுரைகளையும் நூல்களையும் வாசித்து, இயற்கைப் பிரமாணங்களின் பொதுவியல்பைக் கற்றறிய வேண்டும். அனுபவத்தை முறையாக வகுத்தலே ஆராய்ச்சியின் நோக்கம். காட்சியளவை ஆராய்ச்சி முறைகளின் திறமையையும் குறைகளையும் ஆராய்கின்றது.

காண்டற்காட்சிகளை ஒருங்கு சிந்தித்து, அக்காட்சிப் பொருள்கள் எவ்வாறு தோன்றி நின்று அழிகின்றன என்பதை இயற்கையாராய்ச்சி நூல்கள் செப்புகின்றன. இயற்கையாராய்ச்சி நூல்கள் மொழியும் பிரமாணங்களை எவ்வாறு பிரமாணமாக, நிச்சயிக்கிறோமென்பதே காட்சியளவையின் நோக்கம். ஒரு இயற்கை விதியை நிலைநிறுத்தும் முறை யாது என்பதையே தருக்க நூலோர் காட்சியளவைப் பகுதியில் ஆராய்வர்.

இயற்கைவிதிகள் அந்நுவயங்களின் மேற்கோள்களாக உபயோகிக்கப்படுகின்றன. யாண்டுப்புகை ஆண்டுத் தீ என்றாற்போன்ற மேற்கோள்களெல்லாம் வழியனுமானத்தில் உபயோகமாதலான், வழியளவை மூலம் ஒரு கருதலைப் பெறுதற்குக் காட்சியளவை இன்றியமையாதது என அறிக. வழியளவையும் காட்சியளவையும் முரணான முறைகள் அல்லவென்பதைக் கடைப்பிடிக்க. காட்சிகளின்றிக் கருதலளவை, அளவைப் பிரமாணமாகாது. காட்சியும் கருதலுமே சிறந்த

அளவைகள் என்பது, தெற்றெனப் புலப்படும். இம்மனிதன் இறக்குந் தன்மையன் என்பதை அறிதற்கு யாக்கை நிலையாமை என்பதைக் காட்சியளவையால் அறியவேண்டும். இஃதொரு புறமாக, காட்சி ஒன்றை நிருபிப்பதற்கு, வழியளவை இன்றி யமையாதது என்ப. யாண்டுப்புகை ஆண்டுத் தீ என்பதை நிலை நாட்டுதற்கு அட்டிற்புகை தீயுடைத்து, நாட்டிற்புகை தீ யுடைத்து, காட்டிற் புகை தீ யுடைத்து, சுடுகாட்டிற் புகை தீ யுடைத்து, நீரிலோடும் கப்பலின் புகை தீ யுடைத்து, என ஒவ் வொரு காட்சியையும் வழியளவை மூலமாகக் காட்டவேண்டும். இயற்கை விதிகள் காரண காரியத் தொடர்பை உணர்த்து கின்றன. இயற்கை விதிகள், காரண காரியத் தொடர்பை உணர்த்தி அந்நுவயத் துறைகளில் மேற்கோள்களாக வருதலைக் காட்டுதும்.

இயற்கைவிதி; யாதேனும் ஒருபொருள் முகரமானல் அது பிகரமாகும். சிறப்புத் தோற்றம், இது முகரம் ஆகையால் இது பிகரமாகும்.

இயற்கைவிதி:—பாதியாது பூதப்பொருளோ அதுவது தோன்றி நின்றழியும்.

சிறப்புத்தோற்றம். மரம் ஒரு பூதப்பொருள், ஆகையால் மரம் அழிவெய்தும். காய்ச்சும்போது சூடுமிகுந்து பூதப் பொருட்கள் விரிகின்றன. இந்த இலம்பகம் (தூங்குகுண்டு) காய்ச்சப்பட்ட பூதப்பொருள். இலம்பகம் (Pendulam) விரியும்.

ஒரு இலம்பகத்தின் நீளம்கூட அதன் ஊசலாட்டம் (Oscillation) அகலும். காய்ச்சப்படும் இலம்பகம் நீள்கின்றது. ஆகையால்அதன் ஊசலாட்டம் அகலும்.

இத்தகைய இயற்கை விதிகளின், பொதுவியல்பை இவ்வதி காரத்தான் மொழிந்து சிறப்பியல்பை, ஆராய்ச்சி முறையின் இலக்கணத்தை வரையறுக்கும் அடுத்த அதிகாரத்தான், விளக்குவாம்.

## அரிஸ்தாதிலின் குறிப்புரை

பண்டைக் காலத்தில் இயற்கையாராய்ச்சி நூல்கள் பல இல்லையாகலால் அரிஸ்தாதில் வேதனுனுமானம் ஒருவகை அந்நு வயமே, எனக்காட்டினர். சினைகளின் உண்மையையறிந்து, முதலின் உண்மையைத் துணிதலே வேதனுனுமானம் என்றார்.

கப்பலோட்டலின் திறமடைவோர் வல்லுநர்; செருப்புத் தைத்தலில் திறமடைவோர் வல்லுநர். ஆதலின் ஒவ்வொரு தொழிலினும் திறமடைவோரை வல்லுநர் எனத் துணிதலே, வேதனைக்காட்சி.

### 5. யெவேன்ஸ் (Jevons) என்பாரின் குறிப்புரை.

"ஒரு சிறப்புத் தோற்றம் நிகழ்ந்துழி அத்தோற்றத் தின்கண் அமைந்துள்ள இயற்கை விதியை உணர்வதே காட்சி யளவையின் தொழில் என மொழிந்தனர். யெவேன்ஸ் சிறப் புண்மையிலிருந்து ஒருபொது உண்மையைத் துணிதலே வேத ஞானமானத்தின் நோக்கமென்பதை விளக்கினர். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு காரண காரியத் தொடர்பைச் சுட்டும் என்பது யெவேன்ஸின் அபிப்பிராயம். காரணகாரியம் ஒரு கூட்டுண்மை யன்றி ஒரு நீக்கமின்றி நிற்கும் தொடர்பாதலின் ஒரு சிறப்புத் தோற்றத்திலிருந்தும் ஒரு பொதுவுண்மையைத் துணியலா மென்பது கூறுமலேயமையும். கூட்டுண்மைகளை (Aggregate) எண்ணல் முறையால் அறிகிறோம். காரண காரியத்தொடர்பை ஆராய்ச்சி முறைகளால் அறிகிறோம். கூட்டுண்மை ஒரு இயற்கை விதியாகாது. கூட்டுண்மைகளின் துணிபை ஆராய் வாம். ஆராய்ச்சி முறைகளிலும் எண்ணல்முறை ஒருவாறு உபயோகப்படுதலால் எண்ணல் முறையின் இலக்கணத்தைத் தேர்வாம்.

### 6. பூரண வெண்ணல்முறை.

சித்திரை மாதத்து நாட்கள் 32லும் மிகா. வைகாசியும் அவ்வாறே. ஏனைய மாதங்களும் இவ்வாறே. ஆதலின் ஒரு ஆண்டில் உள்ள பன்னிரு மாதங்கள் ஒவ்வொன்றின் நாட்கள் 32லும் மிகா. மாதங்களின் தொகை பன்னிரண்டென அறிந் தோமகலான் எண்ணல் இலகுவாயிற்று.

என்னுடைய ஏடுகளெல்லாம் மந்திர நூல்கள் என ஒருவன் மொழியும்போது அவ்வுண்மை எண்ணல் முறையாகவே பெறப் பட்டது. இவ் விறகுக்குவியலில் 100 நிறை விறகுண்டு என்றும் இக்கலசம் இரண்டுநாழி நெய்யுடையதென்றும் இவ்வாடை நான்கு முழமுடையதென்றும் எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் எண்ணல் முறைகளால் அறிகிறோம். கடற்கரையி லுள்ள மண்ணை எண்ணிச் சொல்ல வியலாதாகலான், எண்ணல் முறைகளுக்கு கோல், நாழி, நிறை முதலியன வேண்டும். பூரண

வெண்ணல் முறையில் ஒருவகுப்பு முழுவதையும் ஒருஅளவை முறையாலளந்து, எண்ணிச் சொல்லவேண்டும். மாந்திரீகன் ஏடுகளையெல்லாம் எண்ணியே தனது ஏடுகள் மந்திரநூல்களென மொழிந்தான்.

## 7. பூரண வேண்ணல் முறையின் கண்டனம்.

எண்ணல் முறையால் ஒரு பயனுமில்லையென, மில் (Mill) கண்டித்தனர். இந்த ஏடுகள் எல்லாம் மந்திரநூல்கள் என மொழிவதால் ஒரு பயனுமில்லை. புதியதோருண்மையை எண்ணல் முறையால் துணிய வியலாது. எண்ணல் முறையால் காரணகாரியத் தொடர்பைத் துணியவியலாது. ஆதலின் எண்ணல் முறையால் பயனில்லை என்றனர். இஃது ஒரு புடையொக்கும். இயற்கையாராய்ச்சிகளை இவ்வெண்ணல் முறையாற் செய்யவியலாது. இயற்கையிலுள்ள ஒரு இனப்பொருட்களை எல்லாம் எண்ணல் இலகுவன்று. எண்ணினும் அப் பொருட்கள் ஏன் அவ்வாறுயின என்பதை மொழியவியலாது.

இக்கண்டனம் குற்றமுடையதென யெவன்ஸ கண்டித்தார். கூட்டுண்மைகளாகிய எண்ணல்முறைத் துணிபுகள், இயற்கை விதிகளை உணர்த்தா வென்பது உடன்பாடெனினும் எண்ணல் முறையால் ஆராய்ச்சிக்கு யாதொரு பயனுமில்லை யென்பது பொருந்தாது. பூரண வெண்ணல் முறையால் உண்மைகளைத் தொகுத்துக் கூறுகிறேம். தொகுத்துக் கூறல், கூறியது கூறல் போல மிகையாகாது. என்னே? எண்ணல் முறையின்றெனின் கூட்டுண்மையைக் கூறவியலாது. ஏடுகள் எல்லாம் மாந்திரிக நூல்களெனத்தொகுத்துக்கூறல்பயனுடையது. ஒருவர்வினவும் போதெல்லாம் ஒவ்வொருஏடாக வாசித்துப்பார்த்து இவ்வேடு மந்திரநூல், இவ்வேடுமந்திரநூலென மொழிவது வீண் முயற்சியாகும்.

ஒரு வாசிகசாலையில் உள்ளஏடுகள் யாவற்றையும் எண்ணல் முறையால் வகுத்து, அக்கூட்டுண்மைகளை எழுதிவைத்தல் பயனுடைத்தாகும். கணிதமுறைகள் எல்லாம் கூட்டலும் கழித்தலுமேயென நினைத்துக் கணித முறைகளைக் கல்லாதிருத்தல் பேதைமை.

## 8. குறையெண்ணல்முறை.

காக்கை கருமையென்பதைத் துணிதற்கு உலகிலுள்ள காக்கைகளை எல்லாம் எண்ணமுடியாது. பலர் சேர்ந்தாலும்

எண்ணமுடியாது. நான் கண்ட காகங்கள் கருமை நிறத்தன. நீர் கண்டதும் அவ்வாறே. அவர் கண்டதும் அவ்வாறே. ஆதலான் காக்கைகள் கருமையெனத் துணிதல் குறையெண்ணலாகும். பறவைகள் இருகாலும் இரு சிறகு முடையன என்பதை நாட்டுதற்குக் கோழி, காகம், கழுகு, கருடன், கரிக்குருவி பருந்து, புறா, குயில் முதலியவற்றையெல்லாம், எண்ணவியலாதாகினும் ஒருவரும் இப்பிரமாணத்தைப் பிழையென நாட்டுதற்குரிய காட்சியைக் காணவில்லை. இங்ஙனம் குறையெண்ணல் முறையாலேயே இயற்கை விதிகளெல்லாம் மொழியப்படுகின்றனவெனச் சிலர் நினைத்தனர்.

## 9. குறையெண்ணல்முறைக் கண்டனம்.

பிரான்சீஸ் பேக்கன் (Francis Bacon) குறையெண்ணல் முறையால் பிரமாணமொன்றைத் துணிவது இழுக்குடைத்தெனக் காட்டினர். காக்கை கருமை என்பது ஒரு எதிர்மறைத்தோற்றப் போலியாகும். ஒரு வெண்மை நிறக் காகத்தைக் காட்டிப் பிரமாணத்தைப் பிழையெனக் காட்டலாம். இக்கண்டனம் பொருத்தமானதே. முகரமும் பிகரமும் இரண்டாயிரம்முறை ஒன்று முன்னிகழ்வதாகவும் மற்றது பின்னிகழ்வதாகவும் காணப்படினும் அவை காரண காரியத் தொடர்புடையவை எனத் துணிய வியலாது. முக்கோணத்தில் மூன்று கோணங்களும் 18-ப் பாகையாகுமென்பது எண்ணல் முறையால் துணியப்பட்டதன்றென முன்னோரமையத்திற் கூறினும். காரண காரியத் தொடர்பை ஆராய்தற்கு எண்ணல் முறை உதவியாகுமொழிய அத்தொடர்பை நிலை நாட்டும் வலிமையுடையதன்று.

(தொடரும்.)

உ

# தமிழ்ச்செய்திகள்

**மகாமகோபாத்தியாய M. V. இராமானுசாச்சாரியார்:—** இவர்கள் எழுபத்துநான்காவது வயதில் 19—4—40-ல் கும்பகோணத்தில் உலகவாழ்வினின்றும் நீங்கினர். தொடக்கத்தில் S. I. Ry. யில் கணக்கர்பிரிவில் (Audit department) எழுத்தாளராக இருந்து சீரங்கம், கும்பகோணம் உயர்தரப்பள்ளிகளிலும், பின்னர் கும்பகோணம்அரசியலார்கல்லூரியிலும் தமிழாசிரியராயிருந்து ஓய்வுபெற்றனர். வியாசர் வடமொழியில் இயற்றிய மாபாரதத்தை, தமிழில் மொழிபெயர்த்தனர். பல்லாண்டுகளாக முயன்றுசெய்த வேலைமுற்றுப் பேறடைந்தமை கருதி மகிழ்வுடன் வாழ்ந்தனர். அதனை மதித்த தமிழகத்தாரின் பூசனையைப் பெற்றனர்; புகழையும் ஈட்டினர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பாடக் குழுவில் இடம்பெற்றும் கடமையைப் புரியமுடியாது, முடிவெய்தினர். அமைதியான குணமுடையராதல்பற்றி எல்லோராலும் நன்கு மதிக்கப் பெற்றனர்.

---

### திருவள்ளுவர் தமிழ் மாணவர்கழகம், அரசர் கல்லூரி, திருவையாறு

### பன்னிரண்டாம் ஆண்டு நிறைவு விழா.

பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் சீரிய தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியில் பேச்சுப் போட்டியில் தேறிய மூவருக்கு மூன்று வெள்ளிப் பதக்கம் பரிசு வழங்கப்பட்டது. இருபெயரொட் டாகுபெயரும் அன்மொழித் தொகையும், திருவள்ளுவர் மதம், என்ற இருபொருள்பற்றி மாணவர்கள் நால்வர் தொடைவிடையாடல் நிகழ்த்தினர்.

தலைவர் முன்னுரையில் முதலாவதாக, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமுள்ள தொடர்பையும், மாணவர்களும் ஆசிரியர் களும் முற்காலத்திருந்த நிலைமையையும், தற்காலத்தில்நடந்து கொள்ளும் முறைகளையும்பற்றிக் கூறினார்கள். வடமொழியில் தொடைவிடையாடல் முறையில் அமைந்த நூற்கள் உள்ளன வென்றும் தமிழில் அம்மாதிரி நூற்கள் இருந்தனவோ? அல்லனவோ? என்று கூற இயலவில்லையென்றும், இருந்திருக்கு மேல்அஃது மிகமழ்ச்சிக் குரியதென்றும் உரைத்தார்கள். தொடைவிடையாடலில் நிகழ்த்திய இருபொருள்களிலும், இரு பெயரொட்டாகுபெயரும் அன்மொழித்தொகையும் மிகவும்சிக்க லான பொருள் என்றும், அதுபற்றி பல கருத்துவேறுபாடுகள் உண்டென்றும், திருவள்ளுவர் நூல் பொதுநூலாகையால் அதிற்பல மதக்கருத்துக்கள் இருக்கலாம் என்றும், சிலபெயர் மாத்திரம் கொண்டுதுணிந்து கூறல் இயலாவென்றும் சில பெயர்களைக் கொண்டு இன்ன மதத்தா ரென்று துணிவார்க்கு, ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் முதலியோர் பாடல்களில் நெடுமாலைப்பற்றிச் சிறப்பித்திருத்தலின் அவர்களை வைணவ ரென்று கூறல் வேண்டுமென்றும், ஆசிரியரே தம் மதம் இது வெனப் புலப்படக்கூறாத நிலையில் நாமாக ஒருமதத்தை அவருக்கு ஏற்பித்தல் வேண்டாம் என்றும் கூறினார்கள்.

பெருஞ்சொல்விளக்கனார் திரு. அ. மு. சரவணமுதலியா ரவர்கள் "வாயுறைவாழ்த்து" என்றபொருள் பற்றிச் சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் "வாயுறைவாழ்த்து" என்பது திருக்குறளுக்குரிய பெயர்களுள் ஒன்றென்றும், அதற்கு அப்பெயர் ஏற்பட்டது, தொல்காப்பியத்தில் வாயுறைவாழ்த்திற்குக் கூறிய இலக்கணம் செறிந்துள்ளமையே யென்றும் உரைத்தனர்.

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குதலின்றி வழி நனிபயக்கு மென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற் றே."

என்ற வாயுறைவாழ்த்து இலக்கணம் கூறிய, தொல்காப்பியச் சூத்திரத்து உரையாசிரியர்கள் "வேம்பும் கடுவும் போன்ற சொற்களைத் தடையின்றி பின்நன்மைபயக்குமென்று கூறுவது" என்றுரைத்தார்களென்றும், தங்குதலின்றியென்பதற்கு "மேற்

கொள்ளுதலின்றி இனிய சொற்களால் கூறல்'' என்று உரைப்பினும் அமையும் என்றும் குறிப்பிட்டுப் பல குறள்களை அதற்கு மேற்கோளாக எடுத்துக் காட்டியதுடன், அவற்றினிடையிடையே இனிய கதை பல கூறி மகிழ்வித்தார்கள். திருக்குறளும் பின்னெழுந்த நீதி நூற்களும் வாயுறை வாழ்த்தைக் காட்டிய முறைகளையும் எடுத்துரைத்தார்கள்.

திருக்குறள் ஒரு பெரிய நூலென்றும், அதனை எத்துணை வகையானும் பாகுபடுத்திச் சொல்லுமவர்களுக்கு இடம் கொடுப்பதென்றும், இதுபோன்ற பல ஆராய்ச்சிகள் திருக்குறளுக்கு வெளிவரல் வேண்டுமென்றும் கூறினார்கள்.

மாணவர்கள் கல்வியைப் பெரிதும் போற்றிப் படித்தல் வேண்டும் என்றும், ஒழுக்கம் மிகச்சிறந்ததொரு பொருளென்றும் அஃது உயிரினும் ஓம்பப்படுவதென்றும், கல்வி ஒழுக்கத்துடன் தெய்வ பக்தியும் மாணவர்களுக்கு வேண்டுமென்றும், கல்வி, ஒழுக்கம், தெய்வபக்தி இம்மூன்றும் மாணவர்களுக்குச் சிறந்த கண்களென்றும் அறிவுறுத்தினார்கள்.

இறுதியில் கல்லூரித்தலைவர் அவர்கள் நன்றி கூறுகையில் வேதத்தை எங்ஙனம் மனப்பாடமாகப் படிக்கின்றார்களோ, அதுபோன்று திருக்குறளையும் ஒவ்வொரு தமிழனும் படித்தல் வேண்டும். திருக்குறள்படியாத ஒருவனை யான் தமிழன் என்று சொல்லத்துணியேன் என்று கூறினார்கள். கல்லூரி மாணவர்களால் ''மண்ணியல் சிறுதேர்'' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. இந்நாடகம் ''மிருச்சகடிகம்'' என்ற வடநூலைத்தழுவி, அண்ணாமலைப்பல்கலைக்கழகம், தமிழ்ப்பேராசிரியர், பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாகும்.

இங்ஙனம்,

வ. சுப்பையன்,

திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழக அமைச்சன்.

# மதிப்புரை

**சங்க இலக்கியம்: எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும்:**—இச் சிறந்த நூல், சென்னை சைவ சித்தாந்த மாசமாசத்தினரின் வெளியீடு. இத்தொகை நூல்களின் பாடல்களைப் பாடிய புலவர்கள் பெயரின் அகர வரிசையில் தொகுத்து வெளியிடப் பெற்றுளது. இது ஆராய்ச்சியாளர்க்கு மிகுபயன் விளைப்பது. பணம் பெருக்கும் நோக்கின்றி, தமிழ் வளர்க்கும் கருத்துடன் இயற்றியது. திருத்தமும், செப்பமும் உறப் பதிக்கப்பெற்றது. இந்நூலைப் பதிப்பித்து தமிழுலகிற்கு உதவக் காரணராயிருந்து பொருளாலும், முயற்சியாலும் உபகரித்து ஊக்கிய அன்பர் திரு. T. K. நாராயணசாமி அவர்களின் நன்றி பாராட்டற்பாலது.

சைவ நூல்களையேயன்றி, சங்க இலக்கியங்களையும் வெளியிட்டுதவிய சைவ சித்தாந்த மாசமாசத்தின் உதவி ஞாலத்தின் மாணப்பெரிது. இதன் விலை ரூபா. **3—4—0.**

**“ அன்பளிப்பு ”** :—இது தேவகோட்டை சாரதா வெளியீட்டுக் கழகத்தினரால், வெளியிடப்பெற்ற சிறிய கட்டுரைத் தொகுதி. இதன் விலை அணா 4. தமிழ்ச்சுவை மாந்திய சில அன்பர்களும் இதற்குக் கட்டுரை உதவியது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**“ அசோகன் இழந்த அருந்தனம் ”** :—இது புதுச்சேரி “ வித்தகம் ” அச்சுக்கூடத்தில் வெளியானது. இதன் விலை அணா 4. அசோகமன்னரின் உள்ளத்துறவும், அருளற ஒழுக்கமும் விதந்துரைக்கப் பெறுகின்றன. தீந்தமிழ்ச்சுவை மல்கவும், செஞ்சொற்கவியின்பம் படிப்போர் உளத்தைக் கவரவும், செவ்விய தமிழ்நடையில் இயற்றப் பெற்றுளது. பேரிலக்கியங்களிற் காணும் சொற்றொடர்களை விரவி எழுதும் அருமை, நூற்புலமை நிரம்பிய வித்தகர்க்கே இயலும். இச்சிறப்பு இதன் நூலாசிரியரிடம் மிக்கு விளங்குகின்றது. இச்சிறுகதை தெவிட்டாத சுவை விளைப்பது. நல்லறிவுக்குப் பெரு விருந்தாவது. தமிழன்பர் படித்து இன்புறற்பாலது. இதன் ஆசிரியர் திருவாளர். வரத. வீரப்பன் அவர்கட்கு எமது வாழ்த்தும், நன்றியும் உரியதாகும்.

௨

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாவில் திரு. ஞானியார் அடிகளால் கரந்தைப் புலவர் கல்லூரி, 16-4-38-ல் திறக்கப்பெற்று புகுமுகவகுப்பு, புலவர் I-வது வகுப்பு களாய இரண்டு வகுப்புகளுடன் நடைபெறுகின்றது. அடுத்து வரும் ஜூன் மாதத்திலிருந்து புலவர் II-வது வகுப்பும், 1941 ஜூன் மாதத்தில் புலவர் III-வது வகுப்பும், 1942 ஜூன் மாதத்தில் புலவர் IV-வது வகுப்பும், அமைக்கப்பெற்று, 1942—43-ம் ஆண்டில் முழுஉருவும் பெறும்.

S. S. L. C. தேர்வுக்குச் சென்ற மாணவர்களில் தமிழில் திறமையுற்றவர்கள் சிலரை ஆண்டுதோறும் கல்லூரியில் சேர்த்து உணவு, உறையுள், கல்வி முதலியவற்றை எளியவர் கட்கு இலவசமாய் அளித்து, தமிழில் ஆர்வமும், கலையில் தெளிவும், மனவுறுதியும், உடைய நன்மாணக்கரைத் தமிழகப் பணிக்கு உரியராக்குதல் கல்லூரியின் சிறந்த நோக்கங்களுள் ஒன்று.

இக்கல்லூரியைச் செவ்விய முறையில் நடத்திவர ஆண்டொன்றிற்கு ரூ. 3000 முதல் ரூ. 5000 வரை வேண்டியிருக்கும்.

கல்லூரியில் இதுபோது பயின்றுவரும் மாணவர்களில் பெரும்பாலர் 17 வயது நிரம்பியவர்கள். 18, 19 வயதுகளில் வித்துவான் தொடக்கத் தேர்வுக்குப் போகக்கூடியவர்கள். இக்கல்லூரியைப் பல்கலைக்கழகத்தினர் ஒப்புதல் (approval) செய்தாலன்றி 25 வயது நிரம்புமுன்னர் ஒருமாணவரும் தேர்வை நாடமுடியாதென்பது விதி.

கல்லூரியைப் பல்கலைக்கழகத்தினர் ஒப்புதல் செய்ய வேண்டுமென விண்ணப்பித்தும், அவ்வேண்டுகோள் மறுக்கப் பட்டது. உசாவியதில் ரூ. 25000 க்குக் குறையாத வைப்பு நிதி (endowment) வைக்கப்பெற்றால் ஒப்புதலைப் பெறலாமெனத் தெரிகிறது.

சென்னைமாகாண எல்லைக்குள் ஒப்புதல்பெற்ற வடமொழிக் கல்லூரிகள் 17 இருக்க, தமிழ்க் கல்லூரிகள் ஒன்றிரண்டு இருப்பதுதான் நேர்மையா? இந்த நிலையில் தமிழார்வம் மிகுந்த அன்பர்களால் பேணிவளர்க்கப் பெறும் தமிழ்ப்புலவர் கல்லூரி ஒன்றேனும் நிலைபெற்று நடக்க வேண்டுமன்றே!

திருவாளர், Sir. A. T. பன்னீர்ச் செல்வம் தமிழர் வாழ்வே தனது வாழ்வெனும் உறுதிகொண்டு தமிழரின் அறப்போரின் முன்னணியில் முனைந்து நின்ற தமிழ் மறவர். திருவையாற்று அரசர் கல்லூரியில், தமிழ்ப் பகுதியைத் தோற்றுவித்து, தமிழ்ப் புலவர்கட்கு வாழ்வளித்த வித்தகர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்து வாணாளுறுப்பினராயிருந்து கரந்தைப் புலவர் கல்லூரியை அன்புடன் வளர்க்க உளங்கொண்டவர். இத் தகுதிகள் வாய்ந்த தலைவரின் பெரும்புகழ்விளங்குதற்பொருட்டு இக்கல்லூரிக்காக வைப்புநிதி ஈட்டி, அன்னார் நினைவுக்குறி (Memorial) ஆக இக்கல்லூரியைக் **கரந்தைப் பன்னீர்ச்செல்வம் தமிழ்க் கல்லூரி** எனப் பெயரிட்டழைப்பது மிகமிக ஏற்புடையதாகும்.

கரந்தைப் புலவர் கல்லூரியின் வளர்ச்சியிலும், திருவாளர், Sir. A. T. பன்னீர்ச்செல்வம்அவர்களின் புகழின் விளக்கத்திலும் கருத்துடைய தமிழன்பர்கள் தத்தமாலியன்றவாறுபொருளுதவி புரிந்தும், எம்முடன்முயன்றுழைத்தும் எமது பெருநோக்கங்கள் நிறைவேறுதற்குத் துணைசெய்வாராக.

**19—4—40-ல் நடைபெற்ற சங்கப் பொதுக்கூட்டத்திற் கருதி முடித்த முடிபு:—**

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் நடந்துவரும் 'தமிழ்ப் புலவர் கல்லூரி' சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒப்புதலை (approval)ப் பெறுதற்கு ரூபா 25,000 ஆகிலும் வைப்புநிதி (endowment) வேண்டியிருத்தலால், **வைப்புநிதியைத் தொகுத்து**, சங்கத்தின் வாணாளுறுப்பினரும், தனித் தமிழ்ப் புலவர் கல்லூரியை ஐயாற்றில் தோற்றுவித்து வளர்த்தவரும், தமிழகத்தின் ஒப்பற்றதலைவருமாய Sir. A. T. **பன்னீர்ச்செல்வம்** அவர்களின் நினைவுக்குறியாக இக்கல்லூரியை **'கரந்தைப் பன்னீர்ச்செல்வம் தமிழ்க் கல்லூரி'** எனப் பெயரிட்டழைப்பதென முடிவு செய்யப்பெற்றது.

வைப்புநிதி தொகுப்பதற்கு, திருவாளர்கள், ஆசிரியர் அ. வரதநஞ்சையப்பிள்ளை, ராவ் சாகேப் ஐ. குமரசாமிப்பிள்ளை, செந்தமிழ்ப்புரவலர். தமிழவேள் - த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, அழகிரிசாமிப்பிள்ளையவர்கள், திரு. நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் ஆகிய ஐவரையும் ஒரு குழுவினராக நியமிக்கப் பெற்றது. வேண்டுங்கால், இக்குழுவில் அவ்வப்போது பிறரைச் சேர்த்துக்கொள்ளவும் இக்குழுவினர்க்கு அனுமதி தரப்பெற்றது.

உ

# நன்கொடைகள்

## புலவர் கல்லூரிக்கு உதவிய அன்பர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. | கதிர்வேல்பிள்ளை | அவர்கள் | 5 | 0 | 0 |
| | நன்னிலம், ஓர் சங்க அன்பர்வழி :— | | | | |
| திரு. | N. வைத்தியலிங்கம் செட்டியார் | அவர்கள் நன்னிலம் | 1 | 0 | 0 |
| ,, | A. இராமலிங்கம் | ,, | 1 | 0 | 0 |
| ,, | சீனிவாச நாயுடு | ,, | 1 | 0 | 0 |
| ,, | தங்கவேல் | ,, | 4 | 0 | 0 |
| ,, | கோபால் | ,, | 1 | 0 | 0 |
| ,, | தாமோதரம்பிள்ளை, கிருட்டினமூர்த்திபிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | கோவிந்தசாமிபிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | இராமச்சந்திரன் | ,, | 5 | 0 | 0 |
| ,, | நா. முனிசாமிபிள்ளை | திருக்கண்ணபுரம் | 1 | 0 | 0 |
| ,, | பஞ்சாபகேச முதலியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | சு. இரத்தனம் பிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | செல்லப்பமுதலியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | இரத்தனவாண்டையார் | திருப்புகலூர் | 1 | 0 | 0 |
| ,, | அருணசலப்பண்டாரம் | ,, | 1 | 0 | 0 |
| ,, | கோவிந்தசாமிபிள்ளை | ,, | 1 | 0 | 0 |
| ,, | M. R. இரத்தனம் | ஆதீனக்குடி | 1 | 0 | 0 |
| ,, | R. முருகையபிள்ளை கிராமாதிகாரி | ,, | 1 | 0 | 0 |
| ,, | C. வைத்தியநாதசாமிஉடையார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | வித்துவான், க. வெள்ளைவாரணர் வழி:— | ,, | | | |
| ,, | சுப்பையா முதலியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | பொ. தருமலிங்க முதலியார் | ,, | 1 | 0 | 0 |
| ,, | அழகுசாமி முதலியார் | ,, | 1 | 0 | 0 |
| | செங்குந்தவாலிபர்சங்கம் | ,, | 1 | 0 | 0 |

## க. த. சங்கம் அப்பர்விழாவிற்கு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ,, | S. மாணிக்கம்பிள்ளை | தஞ்சை | ,, | 14 | 0 | 0 |
| ,, | நா. கந்தசாமிபிள்ளை | ,, | ,, | 1 | 0 | 0 |
| ,, | K. விசுவநாதபிள்ளை | ,, | ,, | 0 | 4 | 0 |
| ,, | A. A. சதாசிவக் கண்டியர் | ஆவாரம்பட்டி | ,, | 0 | 3 | 3 |
| ,, | இராவ்பகதூர் Captain எஸ். கே. பிள்ளை | | ,, | 5 | 0 | 0 |

## வெளியீடு நன்கொடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,, | தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை | ,, | 200 | 0 | 0 |

## க. த. சங்கக்கல்லூரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,, | அ. நே. அ. ஜினகுமார முதலியார் | ,, | 0 | 8 | 0 |